"ஏற்கனவே இந்த பொடி, சுருட்டு முதலிய லாகிரி வஸ்துக்களுக்கு எக்ஸைஸ் டாக்ஸ் மத்திய சர்க்கார் வரி விதித்திருக்கிறார்கள். ஆதலால் விற்பனை வரி போடுவதினால், பெரும் அளவுக்கு இந்தத் தொழில் பாதிக்கும். ஏற்கனவே வேலையில்லாத் திண்டாட்டம் பெரும் பிரச்னையாக இருக்கிறது. இன்னும் இந்த வரி விதிப்பினால் இந்த சிறு தொழில் மிகவும் பாதிக்கும் என்றுதான் சொல்லவேண்டும். ஒரு விஷயத்தில் இந்த லாகிரி வஸ்துக்கள் திரேக ஆரோக்கியத்திற்கு உகந்ததல்ல என்பது உண்மையாக இருந்தபோதிலும், இந்தத் தொழிலில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டிருப்பதினால், இந்த வரி விதிப்பினால் இந்தத் தொழில் பாதிக்குமா, பாதிக்காதா என்பதுதான் இப்பொழுதுள்ள பிரச்னை. இந்த வரி போடுவதன் மூலம் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதகம் அடைகிறார்கள் என்பதை இந்த ஜனநாயக அரசாங்கம் கவனிக்கவேண்டும். ஆகவேதான் இந்த வரியை நாங்கள் எதிர்க்கிறோம். இதனால் பல்லாயிரக்கணக்கான ஏழைத் தொழிலாளர்கள் நிலைமையைப் பார்த்தால், அவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற கண்ணோட்டத்தோடு பார்த்தால், இந்த மசோதாவைக் கொண்டுவருவதற்கு நியாயமே இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

"ஏற்கனவே நண்பர் கே. பி. கோபாலன் சொன்னார் சர்க்காருக்குப் பணம் தேவையாக இருப்பதால்தான் இந்த புதிய வரியை விதிக்கிறார்கள். சர்க்கார் கொண்டுவரும் எல்லா மசோதாக்களையும் நாங்கள் எதிர்க்கவில்லை. உண்மையில் மலைத்தோட்ட விவசாய வருமானவரியை நாங்கள் ஆதரித்திருக்கிறோம். ஆனால் இந்த வரியை ஏன் எதிர்க்கிறோம் என்றால் உண்மையிலே இது சிறு தொழில்களை பாதிப்பதுமல்லாமல் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களையும் பாதிப்பதாக இருக்கிறது. மேலும் இந்த பீடி, சுருட்டு போன்ற லாகிரி வஸ்துக்களை மிகவும் சாதாரண ஜனங்கள் உபயோகப்படுத்துகிறார்கள். முதலில் இந்த மசோதா வந்தபோது நாங்கள் எதிர்த்தோம். சர்க்காருக்கு இன்றைக்குக் கொண்டுவரவேண்டுமென்ற உத்தேசம் இருந்ததால் அப்பொழுது கைவிடப்பட்டது. காரணம் தொழிலாளர்களை பாதிக்கும் என்பதுதான். சர்க்காருக்கு பணம் இல்லை என்ற ஒரே காரணத்திற்காக இவ்விதமாக ஏழைகளை பாதிக்கும் அளவுக்கு இந்த ஜனநாயக சர்க்கார் கொண்டுவருவது உண்மையிலேயே வருந்தத்தக்க ஒரு விஷயமாகும். ஏற்கனவே இந்த புகையிலைத் தொழிலுக்கு மத்திய சர்க்கார் வரி போட்டு இருக்கிறார்கள். அதைக் குறைப்பதற்கு கிளர்ச்சிகள் நடந்துவருகின்றன. இந்த நிலைமையில் புதிய வரிகள் போடாமல் இருக்க வேண்டும் என்று வியாபாரிகள் கேட்கிறார்கள்.

"இந்த புதிய வரி விதிப்பின் மூலம் நம்முடைய அரசாங்கம் 40,50 லட்சம் ரூபாய் எதிர்பார்க்கிறார்கள். இதுமாதிரியாக சிறு தொழில்களின் மேல் புதிய வரி விதித்து வசூலிப்பது வியப்பாகவே இருக்கிறது. ஆதலால் அரசாங்கம் இதையெல்லாம் நன்றாக யோசித்து இந்த புதிய வரியைப் போடாமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்." 10-06 a.m.

Sri G. GOVINDAN:—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது கொண்டுவந்திருக்கும் புகையிலைவரியை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய அங்கத்தினர்கள் இந்த புகையிலை வரியானது அந்த வியாபாரத்தையே மிகவும் பாதிக்கிறது என்று சொல்லுகிறார்கள். இது உண்மைதானா என்று பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இன்றைய தினம், புகையிலை வியாபாரிகளும், பொடி வியாபாரிகளும் தான் பெரிய சீமான்களாகிவிட்டார்கள். காலணாவுக்கு ஆறு கரண்டி பொடி விற்கும் வியாபாரிகள்தான் பெரிய பணக்காரர்களாகி சீக்கிரத்தில் 4, 5 பங்களாக்கள் வாங்கிவிடுகிறார்கள். பல கட்டடங்களுக்குச் சொந்தக்காரர்களாகிவிடுகிறார்கள். இந்த வரி போடுவதினால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதாகச் சொல்லுகிறார்கள். தொழிலாளர்கள் பாதிக்கவேமாட்டார்கள். இந்த வியாபாரத்தில் அதிக வருமானம் வருவதனால் எந்த விதத்திலும் அவர்களை பாதிக்காது என்றுதான் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், இந்தப் புகையிலை வியாபாரம் செய்கிறவர்கள் பெரிய பெரிய கார்கள் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு நிறைய வருமானம் வருவதனால் இந்த வரியைக் கொடுப்பதற்கு தயங்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். தாராளமாக கொடுத்துவிடுவார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லுவதுபோல் அவர்கள் தயங்கமாட்டார்கள்.

"மேலும் இந்த புகையிலை, பொடி, சுருட்டு, பீடி போன்ற லாகிரி வஸ்துக்களினால்தான் மக்களின் வாழ்க்கைத் தரம் குறைகிறது. சிறிய பையன்கள்கூட பெரியவர்களிடம் சிகரெட்டு, பீடிக்கு நெருப்பு கேட்கிறார்கள்."

Sri S. RAMALINGAM:—"நண்பர் ஸ்ரீ கோவிந்தன் அவர்களிடம் எந்தப் பையனாவது பீடிக்கு நெருப்பு கேட்டானா ?"

Sri G. Govindan :—" சென்னையில் அதுமட்டுமா கேட்கிறார்கள், எல்லாம்தான் கேட்கிறார்கள். காசுகூட கேட்கிறார்கள். சாதாரணமாக சிகரெட் குடித்துக்கொண்டு ரோடு பக்கம் தெருவில் போய்க் கொண்டிருந்தால் ' மிஸ்டர் உங்களிடத்திலே ஒரு சிகரெட், பீடி இருந்தால் கொடுங்களேன் ' என்று கேட்கிறார்கள். சிறு பையன்கள் பீடி பிடித்துக்கொண்டு பழங்காலத்து ராஜாக்கள் மாதிரி நடந்துகொண்டு போகிறார்கள்."

Sri P. Chellathurai;—" சிரியவர்கள் புகையிலைப் பிடிப்பதைக் கண்டித்துப் பேசிய நண்பர் ஸ்ரீ கோவிந்தன், சிகரெட் பிடிப்பாரா ? "

Sri G. Govindan;—" ஆமாம், அந்தக்காலத்திலே இந்த புகையிலையைக் குடித்துக் கெட்டவன் நான். ஒரு நாளைக்கு 10 அணா, 12 அணா செலவழித்து பணத்தை வீணாக்கியவன். அந்த அனுபவத்தைக் கொண்டுதான் இன்று சிறியவர்கள் சிகரேட், பீடி பிடிப்பதைக் கண்டிக்கிறேன். ஆதலால் இப்பொழுது போட்டிருக்கும் வரியை ஆதரித்து என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்."

10-12 a.m. * **Sri P. Rangaswami Reddiar** :—" Mr. Deputy Speaker, Sir, during the last $1\frac{1}{2}$ months almost all the hon. Members irrespective of political or party affiliations have been making demands one after another for excavation of channels, construction of dams, construction of tanks, etc., in their respective constituencies. If we total up all the demands, I am afraid, it would exceed receipts by three or four times. Unless we place the ' Alladin's Lamp ' in the hands of the Hon. Minister for Finance, he would not be able to manage to comply with all the demands. In that sense, I think, this taxation measure is a little bit just and appropriate. Otherwise, the Government may not be able to find out sufficient resources to meet the demands made by hon. Members. Some time ago in 1953, it was stated that cigars, cheroots and beedies would be exempted from the sales tax. Sir, the sales tax business even though it is there for the last 16 years, has caused considerable confusion and anomaly. For instance, sometime ago the sales tax was collected on the tax itself and when the High Court pointed it out, it was rectified by a legislaion. Now, even after a careful reading of the provisions of this Bill, one is not quite certain whether the tax would be correctly assessed and collected or it would be assessed and collected according to the whims and fancies of the officers concerned. I have got a statement of figures which are very moderate—so far as tobacco is concerned. The cost of one pound of tobacco paid to the cultivator, that is, the agriculturist, comes to six annas. The Central Government collect six annas by way of excise duty. About 150 to 175 cheroots are made out of one pound of tobacco. Wages for labour come to five annas and three pies. The cost of wrapper comes to nine pies and incidental charges three pies. The total comes to Rs. 1–2–3. Then the Central Government by way of revenue gets six annas and ultimately it comes to Rs. 1–8–3. The cost of the tobacco paid to the agriculturist is only six annas while the ultimate cost of the finished product comes to Rs. 1–8–3 which is more than 300 per cent. Now the sales tax is six pies per rupee for raw

tobacco and in the present amending Bill a further sales tax is proposed to be levied on the finished product. In 1939 there was a sales tax on tobacco and it continued to be levied till, I think, 1943 or 1944 when it was given up as the Central Government assured the then State Government to give a portion of the excise duty to them. Again in 1953 it was revived but it was stated that poor people would not be taxed and cheaper cigars, cheroots and beedies would be exempted from the sales tax. Now perhaps after the proposed setting up of a Socialistic pattern of society, the poor people are also sought to be taxed in this Bill!

"Sir, one hon. Member pointed out that the tax was justifiable in order to prevent young people from using snuff, cigarettes, beedies and other tobacco products. Whatever may be the tax that may be imposed, I do not think that it will effectively prevent old or young persons from using them. He also pointed out that some young people were asking for snuff and other things and it was difficult to manage them. That apart as it is, it is better to refer his Bill to a Select Committee. The Select Committee can take evidence and find out the practical difficulties. Ultimately it should not mean 'mountain laboured and mouse brought forth'. It should really be a measure beneficial for the State and also for the people."

Sri A. RAMASAMI TEVAR—"கனம் உதவி சபாநாயகர் அவர்க 10-16
ளே, இந்த மசோதாவை நாம் ரொம்ப கவனித்து, மிகவும் ஜாக்கிரதையாக a.m.
ஆராய்ந்து பார்க்கவேண்டியது அவசியம்தான். இந்தப் புகையிலை மசோதாவானது ரொம்பவும் உலகப் பிரசித்தி பெற்றது. உலகத்திலேயே இதனால் எல்லா சர்க்கார்களுக்கும் வருவாய் வருகின்றது. வாஸ்தவம்தான். இதிலே நமது நிதி அமைச்சர் அவர்கள்கூட தன்னுடைய வரவு செலவு கணக்கிலே ரொம்பவும் சிரத்தையோடு ஜாக்கிரதையாகவும், அன்போடும் இந்த வியாபாரத்தில் கவனம் செலுத்தி வரி விதித்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். முக்கியமாக இது அவ்வளவு 'எஸ்ஸென்ஷியல்' அல்ல; ஆகவே இது 'லக்ஷுரி' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே இதற்கு விற்பனை வரி கொடுக்கத்தான் வேண்டுமென்று சொல்லப்படுகிறது. வாஸ்தவம். ஆனால் லக்ஷுரிக்குத் தான் ஏற்கனவே ஒரு மசோதா பாஸ் செய்து, அதற்கு 100-க்கு 30 வீதம் வரி போடவேண்டுமென்று செய்திருக்கிறோமே. மேலும் இதை லக்ஷுரியாக ஒருவர்கூட உபயோகிக்கவில்லை. வேண்டுமானால் ஒன்றிரண்டு பேர்கள் உபயோகிக்கலாம். ஆனால் பெரும்பாலோர் தன்னுடைய வாழ்க்கையிலேயே சந்தோஷத்திற்காகவும், ஒரு உற்சாகத்திற்காகவுமே இதை உபயோகிக்கிறார்கள். மேலும் சிலர் தங்கள் நேரத்தை உற்சாகமாகப் பொழுதுபோக்குவதற்கு உபயோகிக்கிறார்கள். இது வெகுசிலரே. இதையெல்லாம் பார்க்கப்போனால், பல பெரியார்களும், நிபுணர்களும் மேல்நாடுகளிலே இவை ரொம்ப முக்கியம், அவசியமென்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இந்த புகையிலைச் சாப்பிடுவதைப் பற்றி அவர்கள் பெரிய பெரிய புஸ்தகங்களையெல்லாம் எழுதியிருக்கிறார்கள். ஆனால் நண்பர் கோவிந்தன் அவர்கள் தெருவிலே போனால் சின்னப் பையன்கள் எல்லாம் பொடியும், பீடியும் கேட்கிறார்கள் என்று இலேசாகச் சொல்லிவிட்டார். அவருக்கு இந்த வியாபாரத்திலே அனுபவம் இருந்து இதைச் சொல்லுகிறார் என்று நான் நினைக்கவில்லை. நண்பர் கோவிந்தன் அவர்கள் தனக்கு உற்சாகமில்லாத சமயங்களிலெல்லாம் இதை ஆரம்பித்து விடுவதை நானே அடிக்கடி பார்த்திருக்கின்றேன். மேலும்,

இந்த வியாபாரத்தினால் பலர் செல்வந்தர்களாகிவிட்டார்கள் என்று சொன்னார்கள். உண்மையிலே இவருக்கு இந்த வியாபாரத்திலேயே கொஞ்சமும் அனுபவம் இல்லையென்பதை ரொம்பவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். உண்மையிலே இந்த வியாபாரத்தினால் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும்? ஒரு சில வியாபாரிகள் செல்வந்தர்களாகி இருக்கிறார்கள். ஆனால் நூற்றுக்கணக்கான, பல்லாயிரக் கணக்கான வியாபாரிகள் தங்களுடைய ஜீவனத்தைக்கூட நடத்துவதற்கு முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது நான் சொல்லாமலேயே சற்று கவனித்துப் பார்த்தால் விளங்கும்.

"சமீப காலத்திலே நான் ஒரு கணக்கை மெயில் பேப்பரிலே பார்த்தேன். இங்கிலாந்திலே 18 வயது வரையில் யாரும் சிகரெட்டோ புகையிலையோ உபயோகிக்கக்கூடாது என்று ஒரு மசோதா கொண்டுவர ஏற்பாடு செய்துகொண்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனால் சென்ற ஆண்டிலேயே சற்று வருவாய் குறைந்து போய்விட்டதாம். இதைப் பழக்கமாகக் குடிப்பவர்களுடைய இடத்திலேயே இந்த மசோதாவைக் கொண்டு வர இருக்கும்போது நம்முடைய இந்தியாவிலேயும் 18 வயது வரை மைனர் பிள்ளைகள் யாரும் இவைகளை உபயோகிக்கக்கூடாது என்று சொல்லுங்கள். அதை நான் சந்தோஷமாக வரவேற்கிறேன்.

"இந்த புகையிலை சம்மந்தப்பட்ட மசோதாவில் மத்திய சர்க்காரும், மாகாண சர்க்காரும் ஈடுபட்டிருக்கிறது. மத்திய சர்க்காரிலே முதன் முதலிலேயே புகையிலைக்கு ரூபாய்க்கு இரண்டணா என்று எக்சைஸ் வரியாகப் போட்டார்கள். பின்னர் மூன்றணா என்று போட்டார்கள். இப்போது ஆறு அணா என்று போட்டிருக்கிறார்கள். இதற்குமேல் சில உயர்தர சுருட்டுக்களுக்கு பாண்ட் கட்டுவதற்கு என்று தனியாக வரி போடப்பட்டிருக்கிறது. 300 ரூபாய்க்கு 120 ரூபாய் ஒட்ட வேண்டுமென்று இருக்கிறது. அதாவது 1,000-க்கு இவ்வளவு ஒட்டவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் நம் சர்க்காருடைய கவனத்திற்கு முக்கியமாக கொண்டுவருவது என்னவென்றால், மத்திய சர்க்கார் தங்களுடைய வருமான வரியில் இந்த எக்சைஸ் டியூடியை நீக்கிவிடுகிறார்கள். ஆனால் நம்முடைய சென்னை சர்க்காரை நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால் அதைப்போல் இந்த விற்பனை வரியை நீக்கிவிடவேண்டுமென்பதுதான். ஆனால் கனம் நிதி மந்திரி அவர்களும், கனம் வருவாய் மந்திரி அவர்களும் தாங்கள் ஒரு முனை வரி விதிக்கப்போவதாகச் சொன்னார்கள். நண்பர் ஒருவர் ஒரு முனைவரி போடவேண்டுமென்று எடுத்துக் காட்டியபோதும், ரெவின்யூ மந்திரி அவர்கள் நாங்கள் ஒரு முனை வரி தான் விதிக்கப் போகின்றோம் என்று மீண்டும் உறுதி கொடுத்தார்கள். அந்த ஒருமுனை வரியை எப்படி விதிக்கப் போகிறார்கள் என்பதைப்பற்றி கேட்கத்தான் நானும் ரொம்ப ஆசையாக இருக்கிறேன். ஆகவே நாணயமுள்ள மந்திரியாக அவர்கள் நடந்து கொள்ளவேண்டுமானால், தயவு செய்து இதை ரொம்பவும் ஆலோசித்து ஒரு முனையில் அனுசரித்து வரி போடவேண்டும். இரண்டாவதாக, நானும் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதாவது பாண்ட் ரோல் செய்யும் சுருட்டுக்களுக்கு விற்பனை வரி போடுவது நியாயமல்ல என்று கொடுத்திருக்கிறேன். இது மத்திய சர்க்கார் வருமான வரியில் சேருகிறது இல்லை. அதைப்போல் இவர்களும் நீக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"அடுத்ததாக, பொதுவாகச் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மாதிரியான புகையிலைகளை யெல்லாம் பெரும்பாலும் ஏழைமக்கள் தான் உபயோகிக்கிறார்கள். பணக்காரர்களோ, செல்வந்தர்களோ அதிகமில்லை. அநேகமாக தொழில் செய்யக்கூடிய மக்கள் தங்களுக்கு உற்சாகமுண்டாக்கிக் கொள்வதற்காகத்தான் இதை உபயோகித்து வருகின்றார்கள். அந்த மாதிரியான பொருளின்மேல் விற்பனை வரியானது விதிக்கப்பட்டால், அதனால் பெரும்பான்மையான ஏழை மக்கள் பாதிக்கப்படு

வார்கள் என்பது என்னுடைய கருத்து. ஆகையால் இதை யோசித்து அவர்களுக்கு ஒருமுனை வரி போட வேண்டியதுதான். அப்படி ஒரு முனை வரி போட்டு, வசூல் செய்தால் அதை வியாபாரிகளும் கொடுக்கத் தயார். ஆனால் சின்னச் சின்ன சில்லரை வியாபாரிகளுக்கு எவ்வித கஷ்டங்களும் ஏற்படாமல் இதை வசூலிக்க ஏற்பாடு செய்தால் சந்தோஷமாக வரவேற்பார்கள். மேலும் இப்போது ரூபாய்க்கு 6 காசு என்று விதிக்கப்பட்டு இருக்கிறது. இது ரொம்பவும் ஜாஸ்தி. அதைக் காலணவாக அதாவது மூன்று காசாக குறைத்துக் கொள்ள வேண்டும். அப்படிக் குறைத்துக் கொள்வதால் சர்க்காருக்கு 50 லட்ச ரூபாய் வருவாய் வராமல் போகாது. கட்டாயம் வரும். ஏற்கனவே மத்திய சர்க்காரானது நம்முடைய சர்க்காருக்கு 40, 50 லட்ச ரூபாய் வருவாயை கொடுத்துக்கொண்டு வருவதாக நிதியிலாகா செக்ரடரியிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன். ஆகையால் அதைப்பற்றி ஒன்றும் கவலைப்படவேண்டியதில்லை. இந்த 3 காசு வரியைப் போட்டாலேயே சர்க்காருக்கு இன்று எதிர்பார்ப்பதற்கு மேலேயே வருவாய் வருமென்பதை நான் சொல்வேன். அப்படி வராவிட்டால் இந்த அசெம்பிளியை விட்டே வெளியே போக நான் ராஜினமா செய்கிறேன். ஆகையால் இதை ரொம்பவும் கவனித்துப் போடவேண்டும். விற்பனை வரி போடவேண்டாமென்று சொல்லவில்லை. ஆனல் நியாயமாக காலணு என்று போட்டால் போதுமென்றுதான் சொல்லுகிறேன். அப்பொழுது தான் இந்தத் தொழிலும் சற்று விருத்தியாகும். ஒவ்வொரு இடத்திலும் இந்தத் தொழில்கள் அதிகம் நடைபெறுகின்றன என்பதை நினைவுறுத்துகிறேன். இப்படியெல்லாம் வரிகள் போட்டால், அடுத்த தடவை தேர்தலில் வெற்றி பெறுவது கஷ்டமென்று கனம் வருவாய் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். காரணம் வட ஆற்காடு, ஆம்பூர், குடியாத்தம் ஆகிய இடங்களிலே இந்தத் தொழில்கள் அதிகம். இப்படிச் செய்தால் அடுத்த முறை நம்முடைய கனம் முதல் மந்திரி அவர்கள்கூட குடியாத்தம் தொகுதியில் நின்று வெற்றிபெற முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆனல் அவர் இப்போது இங்கில்லை.

"சாதாரணமாக நாட்டிலே இன்று பீடி வியாபாரம்தான் அதிகமாகச் செய்யப்படுகிறது. பம்பாய் ராஜதானியிலுள்ள நிப்பானி பீடிகளுக்கு ஒரு பவுண்டுக்கு 14 அணு என்று வரி விதிக்கப்பட்டிருக்கிறது. முதலில் 6 அணுவாக இருந்தது; பின்னர் 9 அணுவாக ஆயிற்று. கடைசியாக 14 அணுவாக உயர்த்தப்பட்டது. இதையெல்லாம் என்னமோ குறைக்கப் போகிறோம் என்று சொன்னர்கள். இதைப்பற்றியும் வியாபார முறையாக நான் நிதி அமைச்சர் அவர்களிடம் அடிக்கடி சொல்லி வந்திருக்கிறேன். அவர்கள் இந்த வியாபாரிகள் பாதிக்கப்படாமல், ஏழை விவசாயிகளுக்கு உற்சாகமூட்டக்கூடிய இந்தப் புகையிலைமீது வரியை விதிப்பதில் நல்ல முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதை லக்ஷுரியாக உபயோகிப்பவர்கள் 100-ல் ஒருவர்கூட இருக்கமாட்டார்கள். தவிர, இப்போது பணக் கஷ்டம் நாட்டிலே அதிகரித்திருக்கிறது. நண்பர் கோவிந்தன் அவர்கள் இந்த வியாபாரம் செய்யக்கூடியவர்கள் எல்லோரும் பணக்காரர்களாகிவிட்டார்கள், வீடுகள் கட்டிவிட்டார்கள் என்றெல்லாம் சொன்னர்கள். ஆனல் உண்மையில் இப்படி வியாபாரம் செய்யக்கூடியவர்கள் கணக்கைப் பார்த்தால், அது கிரெடிட்டில் ஓடுகிறதா, அல்லது டெபிட்டில் ஓடுகிறதா என்பது தெரிய வரும். 'பணக்காரன் இளைத்தால் குதிரை வாங்குவான்' என்ற பழமொழிபோல் இந்த வியாபாரம் செய்யக்கூடியவர்கள் சற்று படாடோபமாக இருந்தால், அதைக் கொண்டு இப்படியெல்லாம் சொல்லிவிடமுடியாது. நான்கூட கார் வைத்திருக்கிறேன். ஆனல் கடன் வாங்கித்தான் வியாபாரம் செய்ய வேண்டியிருக்கிறது. கார் வைத்துக்கொண்டு படாடோபமாக இருந்தால்தான், கடன் கொடுப்பவர்களும் கொடுப்பதற்கு முன்வருகிறார்கள். ஆகவே இந்த வியாபாரம் செய்து பணக்காரர்களானவர்கள் 100-க்கு ஒன்றிரண்டு பேர்கள்கூட இருக்கமாட்டார்கள். இது ஒரு குடிசைத் தொழிலாக நம் நாட்டிலே இருந்து வருகிறது. வெகுகாலமாக உலகம் பூராவும் நம்முடைய இந்தி

யாவிலே செய்யப்படும் சுருட்டுதான் நல்லமாதிரியாக இருந்து வருகிறது. ஹாலண்ட் போன்ற நாட்டோடு போட்டியிட்டு வருகின்றது. இப்படி நல்ல முறையில் நடந்து வருகின்ற தொழிலே பாழ்படுத்தக்கூடாது என்றுதான் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகவேதான் நல்ல முறையில் இலேசாக ஒரு முனையில் வரி போடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்."

10-25 a.m. *SRI S. VADIVELU :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த புகையிலே வரியை மனப்பூர்வமாக எதிர்க்கிறேன். நமது சர்க்கார் கட்சியில் இருக்கக்கூடிய அங்கத்தினர் ஸ்ரீ ராமசாமி தேவர் அவர்கள், பெரும்பாலான விவசாய மக்கள் வாங்கிப் போட்டுக்கொள்ளக்கூடிய பொருள் புகையிலே என்று குறிப்பிட்டார். அதற்கு அடுத்தாற்போல ஸ்ரீ கோவிந்தன் அவர்கள், சாதாரண சிறு பையன்கள் கூட சுருட்டுக்கு நெருப்பு கேட்கிறார்கள், இந்த அளவில் வரி புகையிலேயின் மேலும், புகையிலே பொருள்களின் மீதும் போடப்படுகிறது என்று சொன்னார்கள். நான் கூற விரும்புவதெல்லாம், சாதாரணமாக 100-க்கு 85 விவசாய மக்கள் வேலே செய்துகொண்டு இருக்கிற நேரத்திலேயே ஒரு நாளேக்கு 4, 5 தடவைகள் வயலிலிருந்து கரையேறி வெற்றிலே, பாக்கு, புகையிலே போடுகிறார்கள். பட்டினியாக கிடந்தாலுங் கூட, விவசாயிகள் வாயில் புகையிலேயை அடக்கிக்கொண்டு, இன்றைக்கு சாப்பாடு இல்லே, இன்னும் இரண்டு தடவை புகையிலே போடுவோம் என்று எண்ணிக்கொண்டு இருப்பார்கள். ஆகவே, இந்த புகையிலே வரியானது முக்கியமாக இந்த விவசாயிகளேத்தான் பாதிக்கும்.

" இரண்டாவதாக எடுத்துக்கொண்டால், இந்த பீடி, சுருட்டு தொழில் களில் ஈடுபட்டிருக்கும் சிறு முதலாளிகள், அவர்களுடைய தொழில் பல வரிகளால் பாதிக்கப்பட்டு நாளுக்கு நாள் நசித்துக் கொண்டிருப்பதால், அந்த தொழிலில் வேலே செய்யும் தொழிலாளிகளே வேலேயிலிருந்து நீக்கி வருகிறார்கள் என்பதை சர்க்காரின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இந்த பீடி, சுருட்டு உற்பத்தி தொழிலில் ஈடுபட்டிருக் கும் முதலாளிகள், புகையிலே வாங்கும்போது வரி, அதை சுருட்டு, பீடியாக சுற்றி சீல் (Seal) ஒட்டும்போது வரி, இப்படி பலமுனே வரிகளால் தாக்கப்படும்போது, அந்த தொழிலே விட்டு விட்டு, வேறு தொழில் செய்யலாம் என்று வந்து விடுகிறார்கள். இதனால் அந்த தொழிலில் வேலே செய்யும் தொழிலாளிகள், அவதிப்பட்டு, வெளியேற வேண்டிய நிலேமையில் இருக்கிறார்கள். ஆகவே, இந்த வரியை கைவிடவேண்டும், இதில் கட்சி நோக்கம் பார்க்கக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன். குறிப்பாக எடுத்துக்கொண்டால் சென்ற காலத்தில் முதலமைச்சராக இருந்த கனம் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அவர்கள், இந்த வரியை போடா மல் விட்டு விட்டுச் சென்றார்கள். அதை நமது நிதி மந்திரி அவர்கள் மறுபடியும் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த வரியை கொண்டு வந் தால், சிறு தொழில்கள் நசித்துப்போகும் என்பதைத்தான் திரும்பவும் வலியுறுத்த விரும்புகிறேன். புகையிலே வாங்கும்போது வரி, அதைப் பொடி செய்யும்போது வரி, என்று பல வரிகள் இருக்கின்றன. இதனால் சாதாரணமாக இந்தப் பொருள்களே வாங்குகிற பொது மக்களுக்குத் தான் கஷ்டம் என்பதை மனதில் வைத்துக்கொண்டு, இந்த வரியைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள் ளுகிறேன்."

10-28 a.m. * SRI M. NARAYANA KURUP :—" Mr. Deputy Speaker, Sir, I confess I have not made a detailed and careful study of this measure in comparison with the Madras General Sales Act and the Madras Tobacco (Taxation of Sales and Registration) Act. I place some of my doubts before the Hon. the Minister and I hope he will

clear them. My first point is how this measure will affect small people who sit round the streets, purchase 8 annas worth of beedies or tobacco and then sell it. If he manufactures beedis for Rs. 5, to that extent he becomes a producer and he himself sells it. Will he come under the definition of ' seller ' or a seller whose turnover exceeds Rs. 10,000? That is my first question. Even when the Central Government wanted to levy this tax, because of the inherent difficulties of the small people in maintaining accounts and obtaining licenses, they thought that it would be very inconvenient to levy a tax on small producers.

" Sir, item (viii) of clause 2 reads :—

'raw tobacco, whether cured or uncured, shall be liable to tax under section 3, sub-section (1) only at the point of the first purchase effected in the State of Madras by a dealer but at the rate of six pies for every rupee on his turnover.'

Suppose, Sir, I produce a small amount of tobacco and I sell it. I may not be producing tobacco worth Rs. 10,000. I do not know whether I am entitled to pay this tax . . ."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" The entire difficulty arises because we want single-point taxation.. If it is a question of having multi-point taxation, we need not have changed the basis of taxation at all and we may have allowed it to remain as ' Sales Tax '. But we want single-point taxation as far as tobacco is concerned. So far as raw tobacco is concerned, most of the persons will be small producers on whom it will not be possible to collect this tax for the first sale and therefore it is proposed to collect it from the next dealer who purchases it just as in the case of cardamom and certain other products, we have it on the first purchase. That is the scheme that is adopted for single-point sales tax.

" As far as manufactured tobacco is concerned, it is the sale that is being taxed. It was pointed out by Hon. Member Sri Ramasami Tevar that a beedi manufacturer might be asked to pay on the purchase of raw tobacco required for the manufacture of beedi and again might be asked to pay as a seller of that beedi and thus there would be ' double taxation '. This defect is being rectified by means of a Government amendment."

* SRI M. NARAYANA KURUP :—" That is the point, Sir, which I wanted clarification."

*SRI P. VENKATESHA SHOLAGAR :—" கனம் உப சபாநாயகர் 10-33
அவர்களே, சென்ற காலத்தில் இந்த புகையிலை சம்பந்தப்பட்ட, சிகரெட் போன்ற அதிக விலை விற்கக்கூடிய பொருள்களுக்கு எல்லாம் வரி போடும்போது, சாதாரண ஜனங்கள் உபயோகிக்கின்ற புகையிலை, பீடி, சுருட்டு, இன்னும் பொடி போன்றவைகளுக்கு வரி போட்டால், வெளி ஜனங்களிடமிருந்து வரி வசூலிக்க வேண்டிய நிர்ப்பந்த நிலைமை ஏற்படும் என்ற அடிப்படையில்தான், அதிக விலையுள்ள சிகரெட்டுகளுக்கு வரி கொண்டு வரப்பட்டது. ஆனால் இப்போது அதைப்பற்றி பரிசீலிக்கக்

கூட சந்தர்ப்பமில்லாமல், 'விடிய கல்யாணம் பிடி பாக்கை' என்று சொல்வதுபோல, சட்ட சபை சாயங்காலம் முடியும் நேரத்தில், நெருக்கடியாக இந்த மசோதாவை சபையில் இதை பிரேரபித்து **Select Committee**-க்கு விட்டு பரிசீலனை செய்த பிறகு, சட்டத்தை **pass** செய்வதற்கு சந்தர்ப்பம் அளிக்காமல், வரி போடுவதானது ஒரு மிகவும் மோசமான நிலைமையாகும் என்று குறிப்பிட விரும்புகிறேன். மேலும், இந்த மாதிரியான வரியை ஏழை, எளியவர்கள் மீது விதிக்கப் போகிறார்கள் என்று மக்கள் உணர்ந்து இருந்தால் கூட, ஏழை எளியவர்கள் உபயோகிக்கக்கூடிய பொருள்கள் மீது வரி போடாதீர்கள் என்று ஒரு கிளர்ச்சி செய்து சர்க்கார் தங்கள் எதிர்ப்பை உணரும்படி செய்திருப்பார்கள். ஆனால், துரதிருஷ்டவசமாக யாருக்கும் இந்தமாதிரியான ஒரு வரி போடப்படுகிறது என்பது கூட தெரியாத அளவில் மிகவும் அவசரமாக, கொண்டு வரப்பட்டிருக்கிறது. சென்ற காலத்தில், இந்த பீடி, சுருட்டெல்லாம், ஒரு பைசாவிற்கு ஒரு சுருட்டு, காலணாவிற்கு ஆறு பீடி, ஒரு பைசாவிற்கு இரண்டு பீடி என்று விற்றுக்கொண்டிருந்தது. அப்போது காலணாவுக்கு ஆறு பீடி விற்றது என்றால், இப்போது இரண்டு பீடி விற்கும். ஆனால், இந்த புதிய வரி போடுவதன் மூலம் காலணாவிற்கு ஒரு பீடி விற்கக் கூடிய நிலைமை ஏற்படும் என்று தான் நான் நினைக்கிறேன். இப்படி நான் கூறும்போது, சிலர் சொல்லலாம், சுருட்டு, பீடி குடிப்பது தீய பழக்கம், அதை விட்டுவிட வேண்டும்; அதனால் அந்த பொருள்களின் மீது வரி போடுவது சரியே என்று வாதாடலாம். நான் கூறிக்கொள்ள விரும்புவது என்னவென்றால், சுருட்டு, பீடி குடிப்பது தீய பழக்கம் என்று கூறுபவர்களே, அந்த பழக்கத்தை விட்டு விட முடியவில்லை என்றும் கூறுகிறார்கள். மேலும் நான் குறிப்பிட விரும்புபுவது, சாதாரணமாக மூக்கு நல்ல வாசனையை அனுபவிப்பதற்காக இருக்கிறது என்று கருதப்படுகிறது, ஆனால் அதே சமயத்தில், நாற்றத்தை அனுபவிக்கவேண்டி வந்துவிட்டதென்றால், நாம் மூக்கை அறுத்துக்கொள்ளுவதில்லை. அதே போல, நல்ல செய்திகளை கேட்க காதுகள் இருப்பதாக கருதப்படுகிறது. கெட்ட செய்தி கேட்கும்படி நேரிட்டால், நாம் அதற்காக காதை அறுத்துக்கொள்வதில்லை. நல்லதும், கெட்டதும் கலந்து கலந்து தான் வரும். ஆகவே கெட்ட பழக்கங்களை ஒழிப்பதற்கு எந்த வழிகளில் முயற்சிக்கவேண்டுமோ, அந்த வழிகளில் முயற்சி செய்ய வேண்டுமே தவிர, வரி போடுவதால் மட்டும் ஒழித்துவிட முடியாது என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

"தவிரவும், இந்த சுருட்டு, பீடி தொழிலில் சிலர் அதிகமாக சம்பாதித்து விட்டார்கள், அதனால் இந்த வரியை தாராளமாக போடலாம் என்று சிலர் கூறுகிறார்கள். அதிகமாக சம்பாதித்து இருப்பவர்களுக்கு அதிகமான வரி போட பல வழிகள் நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம். அந்த வழிகளில் அவர்களுக்கு வரி போட முயற்சி செய்யாமல், சாதாரண எளிய மக்கள் மீது வரியை போடக்கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

"மேலும் இந்த மாதிரி புகையிலைக்கு வரி போடுவதன் விளைவாக, பீடி சுருட்டுகள் அதிகமாக உற்பத்தியாகாமல், சிகரெட்தான் அதிகமாக உற்பத்தியாகும் என்று நான் நினைக்கிறேன். அதுவுமல்லாமல், பீடி, சுருட்டுகள் கைகளால் ஒட்டி உற்பத்தி செய்யப்படுவதால், இயந்திர தொழிலோடு போட்டி போட முடியாது. ஆகவே, காலப்போக்கில் பீடி, சுருட்டுத் தொழில்கள் நசித்து, இன்னும் அதிக வேகமாக இயந்திரங்களின் மூலமாக சிகரெட்டுகள் உற்பத்தியாகி, நாளடைவில், பீடி சுருட்டு குடிப்பது போய், சிகரெட் சாப்பிடக்கூடிய நிலைமையை வளர்க்கத்தான், இந்த புதிய வரி விதிப்பு சந்தர்ப்பம் அளிக்கும் என்று நாங்கள் கருதுவதால், இந்த மசேதாவை **Select Committee** க்கு விட்டு சரியாக பரிசீலனை செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிடில், இந்த மசோதாவையே கைவிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்ளுகிறேன்."

2nd April 1955]

*SRI K. MADHAVAN NAMBIAR :—"മിസ്റ്റർ ഡിപ്യൂട്ടി സ്പീക്കർ, സർ, ഞാൻ ഈ ബില്ലിനെ ശക്തിയായി എതിർക്കുന്നു. ഇതു കോടിക്കണക്കിനാളുകളെ ബാധിക്കുന്ന ഒരു നിയമമാണ്. ഇന്നു അസംബ്ലി സമ്മേളനം കഴിഞ്ഞു മെമ്പർമാർ നാട്ടിൽ മടങ്ങിച്ചെന്നാൽ സാധാരണക്കാരായ ആളുകൾ ചോദിക്കുന്നതു നിങ്ങൾ ഈ പ്രാവശ്യം എത്ര പുതിയ നികുതികൾ ചുമത്തിയിട്ടുണ്ടെന്നാണ്. അതിന്റെ അർത്ഥം അസംബ്ലിയിൽ മെമ്പർമാർ വരുന്നതു് പുതിയ നികുതികൾ ചുമത്താൻവേണ്ടിയാണെന്നാണ് ജനങ്ങൾ ധരിച്ചിരിക്കുന്നതു്. അത്രയധികം നികുതികളാണ് ഇന്നു ആളുകൾ കൊടുക്കേണ്ടിയിരിക്കുന്നതു്. സാധാരണക്കാരൻ കാലത്തു ഉറങ്ങിയെഴുന്നേററാൽ ആദ്യമായ നേപക്ഷിക്കുന്നതു് ഇന്നു പുതിയ നികുതികൾ വല്ലതും വന്നിട്ടുണ്ടോ എന്നാണ്. തൊട്ടതിനും പിടിച്ചതിനുമെല്ലാം നികുതി. നികുതിഭാരം താങ്ങാനാവാതെ സാധാരണജനങ്ങൾ ഇന്നു ഞെരുങ്ങുകയാണ്. ഇപ്പോൾതന്നെ കോർട്ട്ഫീസ് വർദ്ധിപ്പിച്ചു കഴിഞ്ഞു. ഒരു കഷണം പുകയില വാങ്ങാൻ ചെന്നാൽ അതിനും നികുതി. സാധാരണക്കാരായ ബഹുജനങ്ങളെ ബാധിക്കുന്ന പുതിയ നികുതികൾ ചുമത്തുമ്പോൾ ജനങ്ങളുടെ സാമ്പത്തികസ്ഥിതി എന്താണെന്നുകൂടി അന്വേഷിക്കേണ്ടതാണ്. സാമ്പത്തികമായി അധഃപ്പതിച്ചുകൊണ്ടിരിക്കുന്ന ജനങ്ങളുടെ മേൽ തൊട്ടതിനും പിടിച്ചതിനുമെല്ലാം നികുതി കെട്ടുകയെന്നു പറഞ്ഞാൽ അവരെ ദാരിദ്ര്യത്തിലേക്കു ആഴ്ത്തുക എന്നാണ് അർത്ഥം.

"ഇത് ഏകമുഖനികുതിയാണെന്നാണ് ഗവമ്മേണ്ട് വാദിച്ചുകൊണ്ടിരിക്കുന്നതെങ്കിലും യഥാർത്ഥത്തിൽ ബഹുമുഖനികുതിയാണെന്നു മനസ്സിലാക്കാൻ പ്രയാസമില്ല. സാധാരണ വില്പനനികുതി ഉറുപ്പികക്കു 3 പൈ ആണ്. ഈ ബില്ലനുസരിച്ച് 6 പൈയാണ് വച്ചിരിക്കുന്നതു്. ഇതുകൂടാതെതന്നെ പുകയിലകൃഷിക്കാരനിൽനിന്നും വില്പനക്കാരനിൽനിന്നും വേറെയും നികുതി പിരിക്കുന്നുണ്ടു. അതിനെല്ലാം പുറമെ നിലനികുതിയുമുണ്ടു്. ഇത്രയും നികുതി പിരിച്ചതിനുശേഷം ഏകമുഖനികുതിയാണെന്നു വാദിക്കുന്നതിന്നു അർത്ഥമൊന്നുമില്ല. ഇതു പൊതുജനങ്ങളെ കഠിനമായി ബാധിക്കുന്ന ഒരു നികുതിയായതുകൊണ്ടു് ഇതു ചുമത്താനേ പാടില്ലെന്നാണ് ഞാൻ പറയുന്നതു്. ബില്ലിനെ ഞാൻ ശക്തിയായി എതിർക്കുന്നു."

SRI S. RAMALINGAM :—"கனம் சபாநாயகர் அவர்களே, புகையிலைக்கும், புகையிலை பொருட்களுக்கும் இப்போது வரி போடுவதற்காக ஒரு மசோதாவை சர்க்கார் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த புதிய வரியை கம்யூனிஸ்டு கட்சி பலமாக எதிர்க்கிறது என்று சபையில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக சென்ற 1953-ம் ஆண்டில் ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் இருந்த போது, இதே மாதிரி புகையிலை, புகையிலை பொருட்கள் மீதும் வரி போட வேண்டுமென்று ஒரு மசோதா கொண்டு வந்த போது, பொது மக்கள், வியாபாரிகள், மற்றும் இந்த சபையிலுள்ள பெருவாரியான அங்கத்தினர்கள் எழுப்பிய ஆட்சேபணைக்கு செவி சாய்த்து, சில பொருட்களின் மீது வரி விதிப்பதை கைவிட்டார். ஆனால் அவர் எந்தெந்த பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று சொன்னார்களோ, அவைகளின் மீது எல்லாம் வரி விதிக்க இப்போது உள்ள சர்க்கார் முன் வந்திருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் நான் இங்கு குறிப்பாக கூற விரும்புவது என்னவென்றால், சர்க்கார் சொல்லுகிறார்கள் ஒரு முனையில் தான் புகையிலைக்கு வரி போடப்போகிறோம் என்று. அந்த மாதிரி சொல்லும்போது, இந்த வரி யாரை பாதிக்கிறது என்பதை நாம் கவனிக்கவேண்டும். சர்க்கார் கட்சி தரப்பில் இருக்கக்கூடிய அங்கத்தினர்கள் சொன்னார்கள் 'இந்த வரி பெருமளவிற்கு பொது மக்களை பாதிக்காது. புகையிலை வியாபாரத்தில், சுருட்டு, பீடி வியாபாரத்தில், பெரிய பெரிய முதலாளிகளெல்லாம் ஈடுபட்டிருக்கிறார்கள், கார் வைத்துக்கொண்டிருக்கிறார்கள், கொள்ளை அடித்துக்கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கு சாதகமாகத் தான் கம்யூனிஸ்டு கட்சிக்காரர்கள் பேசுகிறார்கள்' என்று மிகவும் வருத்தப்பட்டார்கள். நண்பர் ஸ்ரீ கோவிந்தன் அவர்கள் நாங்கள் பெரிய வியாபாரிகளுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசுகிறோம் என்று குற்றம் சாட்டினார்கள். ஆனால் நான் 10-40 a.m.

அவருக்கு குறிப்பிட்டு காட்ட விரும்புகிறேன். இந்த புதிய மசோதாவினால் **'Raw tobacco whether cured or uncured shall be liable to tax under section (1), only at the point of the first purchase effected in the State of Madras, by a dealer but at the rate of six pies for every rupee on his turnover'** என்ற ஒரு விதியிருக்கிறது. இந்த விதி அமுலுக்கு வருமேயானால் என்ன நிலைமை ஏற்படும் என்பதை ஸ்ரீ கோவிந்தன் அவர்களும், சர்க்காரும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பத்தாயிரம் ரூபாய்க்கு தான் வரி செலுத்த வேண்டுமென்கிறார்கள். அது உண்மை. ஆனால் வியாபாரிகள், 500 ரூபாய்க்கு கொண்டு வந்து விற்றாலும் சரி, அதற்காக கையை விட்டு வரி கொடுக்கப்போவதில்லை. அதற்குப் பதிலாக, விவசாயிகள் சாகுபடி செய்த புகையிலையை, வியாபாரிகளிடம் கொண்டு வந்து விற்கும் போது, இந்த 500 ரூபாய்க்குள்ள வரியை, அரையணா வீதம் விற்பனை வரி கட்ட வேண்டுமென்று சொல்லி, அதைக் குறைத்துக் கொண்டு ரசீது போட்டு கொடுக்கப் போகிறான். இது தான் நடக்கப் போகிறது. இப்படி நடக்குமேயானால், இது யாரை பாதிக்கும். வியாபாரிகள் ஒரு போதும் கையை விட்டு வரி கொடுக்கப் போவதில்லை. நேரிடையாக **'First purchase'** என்ற பெயரில், விவசாயி கொடுக்கப் போகிறான். இன்றைக்கும் எங்கள் ஜில்லாவில் இந்த மாதிரி நடந்து கொண்டிருக்கிறது. தஞ்சையில் கடலை உற்பத்தியாகிறது. அப்படி உற்பத்தியாகும் கடலையை, தோலை உறித்துவிட்டு, வியாபாரிகளுக்கு விற்கிறார்கள். வியாபாரிகள் அதை எடை போட்டு, அவர்கள் (வியாபாரிகள்) செலுத்த வேண்டிய விற்பனை வரியை கழித்துக்கொண்டு, மீதி ரூபாயைத்தான் விவசாயிகளுக்கு கொடுக்கிறார்கள். இது பகிரங்கமாக நடக்கிறது. ரசீது போட்டு கொடுக்கிறார்கள். மேலும், இன்றைக்கு வியாபாரிகள் வரியை தங்கள் சொந்த பணத்திலிருந்து கொடுக்கவேண்டுமென்ற சட்டம் கிடையாது. விற்பனை வரியை, வசூலித்துக்கொடுக்கலாம் என்று **General Sales Tax Act** சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக என்று 6 ரூபாய் கட்டி லைசென்சு வாங்குகிறார்கள். அப்படி லைசென்சு வாங்கி விட்டு, அவர்கள் கடையில் சாமான்களை வாங்கக் கூடிய ஜனங்களிடம், ரூபாய்க்கு காலணா வீதம் வரி வசூலிக்கிறார்கள். அதே போல, விவசாயிகளிடம் புகையிலை வாங்கக் கூடிய வியாபாரிகள் 50 ரூபாய்க்கு புகையிலை வாங்கினால், 50 ரூபாய்க்கு, ரூபாய்க்கு அரையணா வீதம், ரூ. 1-9-0 தாங்கள் செலுத்த வேண்டிய வரிக்காக கழித்துக் கொண்டு, மீதி ரூபாயைத்தான் விவசாயிகளுக்கு கொடுப்பார்கள். ஆகையால், விவசாயிதான் பெருமளவிற்கு பாதிக்கப்படுவான் என்பதை சிந்தித்து பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். **(MR. SPEAKER in the Chair).** அடுத்தபடியாக, **Manufactured Beedi** அதாவது புகையிலையை, பீடியாகவோ, சுருட்டாகவோ, அல்லது பொடியாகவோ செய்த பிறகு, அவற்றை யார் விற்பனை செய்கிறானோ அவன் ரூபாய்க்கு அரையணா வீதம் வரி கொடுக்க வேண்டுமென்றிருக்கிறது. இதையும் பெரிய முதலாளிகள் கொடுத்தால் பரவாயில்லை. ஆனால் சிறு கடைக்காரர்கள் தான் கொடுக்க வேண்டி யேற்படுகிறது. நான் சின்ன பையனாக இருக்கும் போது, தஞ்சையில் தம்பம்பட்டி—பவானி சுருட்டு விற்கக்கூடிய கடைகள் நிறைய இருந்தன. ஆனால் இன்றைக்கு அந்த கடைகள் இருக்கக்கூடிய இடம் தெரியவில்லை, 15, 16 சுருட்டு கடைகள் இருந்த இடத்தில், இன்றைக்கு மூன்று கடைகள் தான் இருக்கின்றன தஞ்சையில். ஏன் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது? வியாபாரத்தில் லாபம் கிடைத்தால் எவனும் கடையை மூடிவிட்டு போகமாட்டான். நாட்டில் ஏற்பட்டிருக்கிற பொருளாதார மந்தம், மற்றும் மத்திய சர்க்கார் உள்பட போடும் புதிய வரிகள், அவைகளால் ஏற்பட்டிருக்கக்கூடிய பல நிர்ப்பந்தங்கள், கட்டுப்பாடுகள், இவைகளை தாங்க முடியாமல், சிறு முதலாளிகள், 1,000, 2,000 ரூபாய் மூலதனம் போட்டு மானமாக ஜீவனம் செய்ய வேண்டும்,

2nd April 1955] [Sri S. Ramalingam]

கௌரவமாக தொழிலை நடத்த வேண்டும் என்று எண்ணிய சிறு சுருட்டு தொழில் முதலாளிகள், எனக்குத் தெரிந்து, தங்கள் கடைகளை மூடி விட்டார்கள், தஞ்சையில்.

" தஞ்சை ஜில்லாவில் பல கடைகள் இருந்தன. ஆனால் இப்பொழுது இரண்டு மூன்று கடைகள் தான் இருக்கின்றன. ஒரு இடத்தில் சுமார் 150 தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டு வந்தார்கள், இப்பொழுது ஐந்தாறு பேர்கள் தான் இருக்கிறார்கள். ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்த இடத்தில் இப்பொழுது 200 பேர்கள் தான் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். மற்ற அவ்வளவு பேர்களும் வேலை இல்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் மத்திய சர்க்கார் புதிதாக புகையிலைக்கு டூடி போட்டிருக்கிறார்கள். ஆயிரத்திற்கு அதிகப்படியான சுருட்டுக்கு ஆறணா டூடி போட்டிருக்கிறார்கள். அப்படி போட்டதனால் அந்தத் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலைமையில் பல கடைகளை மூடி விட்டார்கள். இன்னும் நாம் வேறு வரி போட்டால் அந்த முதலாளிகளுக்கு பல விதத்தில் தொந்தரவுகள் ஏற்படலாம். அந்த நஷ்டத்தை வியாபாரிகள் தங்களுடைய கையிலிருந்து கொடுக்கமாட்டார்கள். தொழிலாளர்களுடைய தலையில் அந்த வரியை வைத்துத்தான் கொடுக்கப்போகிறார்கள். மற்றும் பொது ஜனங்களுடைய தலையில் வைத்துத்தான் கொடுக்கப் போகிறார்கள். பொடி போடுகிறவர்களுக்கும் தான் இந்த வரி போய் சேரும். கனம் கோவிந்தன் அவர்களைப் போல் பொடி போடுகிறவர்களைத்தான் இந்த வரி பாதிக்கும். இப்பொழுது அவர் இரண்டு சிம்டா போட்டால் இனி மேல் அவர் ஒன்றரை சிம்டா தான் போடுவார். அந்த அளவில் பொடி போடுகிறவர்களையும் பாதிக்கும். அந்த மாதிரியான நிலைமை ஏற்படும்."

(Sri G. Govindan stood up.)

MR. SPEAKER :—" The hon. Member is not yielding."

SRI S. RAMALINGAM :—" I am not yielding, Sir."

SRI G. GOVINDAN:—"**On a point of order Sir**, ஒரு ஒழுங்குப் பிரச்னை. என்னைபற்றி கனம் அங்கத்தினர் பேசுகிறார். அதற்கு நான் பதில் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. நான் பொடி போடுகிறேன் என்று சொல்லுகிறார். 'நான் பொடி போடுவதில்லை என்றும், பொடி போடுகிறவர்களை தடுப்பேன்' என்பதையும் நான் அவருக்குத் தெரியப்படுத்துகிறேன். அந்த பழக்கம் எனக்குக் கிடையாது."

SRI S. RAMALINGAM :—" அந்த முறையில் பொது மக்களுக்குப் கொடுக்கப்படும் புகையிலை குறைக்கப்படும். பீடி சுருட்டு இவைகளின் சைஸ் குறையும். அல்லது அங்கு வேலை செய்யக் கூடிய தொழிலாளர்கள் குறைக்கப்படுவார்கள், அல்லது அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் குறைக்கப்படும். இந்த நிலைமை ஏற்படுமேயொழிய வியாபாரிகளும் முதலாளிகளும் தங்களுடைய கையிலிருந்து ஒரு நாளும் வரிப் பணத்தைக் கொடுக்க மாட்டார்கள்.

" சினிமா பில்லைப் பற்றி பேசும்போது கனம் நிதி மந்திரி அவர்கள் அப்ரூவ்ட் பிலிம்ஸை சினிமாவில் காட்டும்போது முதலாளிகள் தங்களுடைய கையிலிருந்து கொடுக்க மாட்டார்கள். அதற்கு பதிலாக பார்ப்பவர்களிடமிருந்து வசூலித்துத்தான் கொடுப்பார்கள் என்று சொல்லப்பட்டது. அதை இப்பொழுது அவருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். புகையிலையை அதிகமாக உபயோகிக்கக் கூடியவர்களுக்குத்தான் இந்த வரி போகும். சாதாரணமாக கிராமங்களில் விவசாயிகள் இரண்டு வேளை பட்டினி கிடந்தாலும் வாயில் புகையிலையை போட்டுக்கொண்டு தான் வேலை செய்வார்கள். அதைப் போட்டுக் கொள்ளும் மயக்கத்தில் பட்டினியை மறந்து தன்னுடைய வேலையைச் செய்வார்கள். இப்படித் தான் இப்பொழுது கிராமங்களில் நடந்து கொண்டிருக்கிறது. கீழேயும்

விழலாம் என்று கனம் கோவிந்தன் சொல்லுகிறார். அவரைப்போல் உள்ளவர்கள் தான் கீழே விழுவார்கள். சர்க்கார் இந்த வரியை சென்ற ஆண்டிலேயே கொண்டு வந்தார்கள். அப்பொழுது வியாபாரிகளும் மற்ற வர்களும் கடுமையாக எதிர்த்ததால் அப்பொழுது அதை கைவிட்டு விட்டார்கள். ஏழை விவசாயிகளையும் பொது மக்களையும் இது வெகுவாக பாதிக்கும் என்று எடுத்துக் காட்டியதால் அதை கைவிட்டு விட்டார்கள். இந்த வருஷம் இதை திரும்பவும் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படி கொண்டு வரவேண்டாம் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்ளு கிறேன்.''

10-45 a.m. Sri M. KALYANASUNDARAM :—" கனம் சபாநாயகர் அவர் களே, இந்த மசோதாவை எதிர்ப்பதற்காகத்தான் நான் எழுந்து நிற்கிறேன். இந்த வரி முற்றிலும் அவசியமா அல்லது அவசியம் இல்லை யா என்பதுதான் பிரச்னை. இந்தப் பொருள்களை ஜனங்கள் உபயோகப் படுத்துவது அவசியமா அல்லது உபயோகப்படுத்தாமல் இருப்பது அவசிய மா என்ற பிரச்னை அல்ல. அந்தப் பிரச்னைக்கு இப்பொழுது இறங்கு வதற்கு இல்லை. இந்தத் தொழிலை நம்பி, நம்முடைய ராஜ்யத்தில் இரண்டு லட்சம் தொழிலாளர்கள் புகையிலையிலிருந்து பல பொருள் களை உற்பத்தி பண்ணுவதில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலை மையைப்பற்றித்தான் நாம் கவலைப்படவேண்டியதாக இருக்கிறது. இந்தத் தொழில் ஏற்கனவே இருக்கக்கூடிய வரிச் சுமையை தாங்கமுடியாமல் திணறிக்கொண்டு இருக்கும் கட்டத்தில் இருக்கிறது. அதை உத்தேசித் துத்தான் மத்திய சர்க்கார் கூட அவர்கள் வசூலிக்கக்கூடிய வரியில் 100-க்கு 20 சத விகிதம் தாற்காலிகமாக தள்ளுபடி செய்துகொண்டிருக் கிறார்கள். பீடிக்கு உபயோகப்படுத்தப்படும் புகையிலையை எடுத்துக் கொண்டால் மத்திய சர்க்கார் பவுண்டுக்கு 14 அணா வசூலிக்கிறார்கள். சுருட்டு முதலியவைகளை தயாரிக்கக்கூடிய புகையிலையை எடுத்துக்கொண் டால் பவுண்டுக்கு 6 அணா என்று வசூல் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆயிரத்துக்கு $1\frac{1}{2}$ ரூபாய் வீதம் கிட்டத்தட்ட 100-க்கு 40 சதவிகிதம் மத்திய சர்க்கார் வரி மூலம் வசூலித்துக்கொண்டு வருகிறார்கள். முன் பெல்லாம் சுருட்டு முதலியவைகளை வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்யக் கூடிய நிலைமையில் நம் ராஜ்யம் இருந்தது. அது இப்பொழுது குறைந்துபோய் விட்டது. பாகிஸ்தான் முதலிய நாடுகளுக்கு இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. குறிப்பாக நம் ராஜ்யத்திலுள்ள உறை யூர், திண்டுக்கல் சுருட்டுகள் மிகவும் பிரபலமாக உள்ளது. நான் அந்தப் பிரதேசத்திலிருந்து வருவதால் அதன் நிலைமையைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். சுருட்டு உற்பத்தியாகும் இடத்திலிருந்து தான் நான் வருகிறேன். அதைப்பற்றி எனக்கு நேரடியாகத் தெரியும். வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்து வந்தது இப்பொழுது ரொம்பவும் குறைந்துவிட்டது. 2,000 அல்லது 4,000 பேர்கள் வேலை செய்துகொண்டு வந்த இடத்தில் இப்பொழுது 400 அல்லது 500 பேர்கள்தான் வேலை செய்துகொண்டு வருகிறார்கள். இன்னும் இந்த வரியைப் போட்டால் சுருட்டு, பீடி தொழில்கள் முக்கியமாக மேலும் பாதிக்கப்படும். அதன் மூலம் ஆள் குறைப்பு ஏற்படலாம். சம்பளக் குறைப்பு ஏற்படலாம். ஒரு நாளும் வியாபாரிகள் தங்களுடைய லாபத்தை விட்டுக்கொடுக்கப் போவதில்லை. அந்த நிலைமை ஏற்படும் இந்த வரியைப் போட்டால்.

" இன்று எனக்கு ஒரு தகவல் வந்திருக்கிறது. சென்னை நகரத்தில் சில பீடி முதலாளிகள் இந்த வரி வரப்போகிறது என்றும் அது எப்படி வருமோ என்றும் தங்களுடைய கடைகளை மூடிவிட்டதாக தகவல் வந் திருக்கிறது. எப்படி வரி போடப்போகிறார்களோ என்ற விஷயம் தெரிய வில்லையென்று அவர்கள் சொல்லி ஒரு வாரத்திற்குப் பிறகு வாருங்கள் என்று தொழிலாளர்களுக்கு தகவல் கொடுத்திருப்பதாக எனக்கு தகவல் வந்திருக்கிறது. அதனால் இப்பொழுது ஆயிரக் கணக்கான தொழிலாளர் கள் வேலை இல்லாமல் திண்டாடிக்கொண்டிருப்பதாக தெரிகிறது.

சர்க்காருக்கும் அவர்கள் மகஜர்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்த வரியை விதித்து அதையும் அமுல் நடத்த முற்பட்டால் இந்தப் பீடி, சுருட்டு தொழில், மேலும் பாதிக்கப்பட்டு தொழிலாளர்கள் ரொம்பவும் கஷ்டப்படுவார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ளுகிறேன். ஒரு பக்கத்தில் சர்க்கார் குடிசைத் தொழில்களை ஆதரிக்கவேண்டும். அதற்கு முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது இந்த வரியைக் கொண்டுவருகிறார்கள். அப்படி சொல்லிக் கொண்டுவந்து இந்த வரியைப் போட்டால் அந்தத் தொழிலை நாசப் படுத்தப்படும் என்பதை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

"இப்பொழுது ஒரு முனை வரிதானே போடுகிறோம் என்று சொல்லுகிறார்கள். இது ஒரு முனை வரி அல்ல. புகையிலையானது சுருட்டாகவோ பீடியாகவோ தயாரிக்கப்படுகிறது. அதற்கு வரி போடப்படுகிறது. புகையிலை சுருட்டாகிறது, அதற்கு வரி போடுகிறீர்கள். அத்துடன் மத்திய சர்க்கார் வரி போடுகிறார்கள். அப்படி கொடுக்கக்கூடிய வரிக்கும் சேர்த்து இரண்டிற்கும் விற்பனை வரி போடுகிறார்கள். புகையிலை மதிப்பு, மத்திய சர்க்கார் போடும் வரி, எல்லாவற்றிற்கும் சேர்த்து அரையணு விற்பனை வரி போடுகிறார்கள். ஆனால் சட்டத்தில் ஒரு முனையில்தான் விற்பனை வரி போடுகிறோம் என்று சொல்லுகிறார்கள். இது ஒரு முனை விற்பனை வரி அல்ல, பல முனை விற்பனை வரி. சட்டத்தில் ஒரு முனை விற்பனை வரி என்று போட்டுவிட்டால் ஜனங்கள் நம்பிவிடுவார்கள் என்று போட்டிருக்கிறார்கள். ஆகவே பல கட்டத்தில் விற்பனை வரியை வசூலிப்பது மோசமானதாக இருக்கப்போகிறது. ஆனால் நாட்டில் வியாபாரிகள் எல்லோரும் ஒரு முனை விற்பனை வரிதான் போடவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். உணவுப் பொருள்களின் மீது விதிக்கப்பட்டுள்ள விற்பனை வரியை எடுக்கவேண்டும் என்றும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதை எடுத்ததாகவே தெரியவில்லை. அவைகளுக்கு விதிவிலக்கு கொடுக்கவேண்டியது நியாயமாக இருக்கிறது. இப்படிப்பட்ட பொருள்களுக்குக்கூட விற்பனை வரியைக் கொண்டுவந்திருப்பது ரொம்பவும் அக்கிரமமானது. சர்க்காருக்கு பணம் வேண்டும் என்பதில் ஆட்சேபணை இல்லை. பணம் தேவைப்படலாம். அப்படி பணம் வேண்டும் என்றால் மத்திய சர்க்காரிடமிருந்து அவர்கள் போடக்கூடிய டீடியிலிருந்து சண்டை போட்டு வாங்கிக்கொள்ளலாம். அவர்களிடமிருந்து கேட்டு வாங்கிக்கொள்வதற்கு நியாயம் இருக்கிறது. நமக்கும் ஒரு பங்கு கொடுக்கவேண்டும் என்று நாம் அவர்களைக் கேட்கலாம். அப்படி இல்லாமல் இந்தத் தொழில் நாசமடையும் நிலைமையில் அதற்கு வரி போடுவதை யாரும் ஆதரிக்க முடியாது. சர்க்கார் கட்சி அங்கத்தினர்களும் இதை ஆட்சேபிக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு சில நிர்ப்பந்தங்கள் இருப்பதால் இதற்கு ஆதரவு கொடுக்கலாம். ஆனால் அவர்களை தனிப்பட்ட முறையில் கேட்டால் அவர்களும் இந்த வரியை ஆதரிக்க மாட்டார்கள். தனிப்பட்ட முறையில் அவர்களுடைய அபிப்ராயத்தைக் கேட்டால் அவர்களும் இது அக்கிரமமான வரி என்றுதான் சொல்லுவார்கள். கட்சி நிர்ப்பந்தம் இல்லாமல் இருந்தால் அவர்களும் இது வேண்டாம் என்றுதான் வாதாடுவார்கள். இதைப்பற்றி பேசியாக வேண்டுமே என்பதற்காகத்தான் இதை ஆதரித்துப் பேசுகிறார்கள். இதை கனம் மந்திரி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இரண்டு மூன்று நாட்களாக கனம் மந்திரி அவர்களுடன் இந்த வரியைப்பற்றி பேசுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அப்பொழுது இதைப்பற்றி அவருக்கு நான் தெளிவாக எடுத்துக் காண்பித்தும் அவர் இதிலிருந்து ஒரு அங்குலம் கூட விட்டுக்கொடுத்ததாகவே தெரியவில்லை. தான் கொண்டு வந்திருக்கும் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு முடிவு செய்திருப்பதாகத் தான் தெரியவந்தது. அவர் பின் வாங்குவதாகவே இல்லை. அப்படியே அவரும் சொல்லி வந்தார். ஆனால் இதற்கு ஒரு திருத்தம் கொண்டுவரப்போகிறோம் என்று சொல்லுகிறார். அந்தத்

திருத்தம் எப்படி இருக்குமோ தெரியவில்லை. அதை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்குமோ என்னமோ தெரியவில்லை. திருத்தத்தை ஆலோசனை பண்ணவும் நாங்கள் தயாராக இருக்கிறோம். இந்த மசோதாவின் அடிப்படையைப் பார்த்தால் இந்த தொழில் பெரிதும் பாதிக்கும் என்றுதான் தோன்றுகிறது. ஆகவே இந்த மசோதாவை ஒரு செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி செலெக்ட் கமிட்டிக்கு அனுப்பிவைத்தால் அங்கு இதைப்பற்றி நன்கு விசாரணை செய்யலாம். வியாபாரிகளும் வருவார்கள், அவர்களையும் கலந்து ஆலோசிக்கலாம், அவர்களுடைய அபிப்ராயத்தையும் நாம் கேட்கலாம், சம்பந்தப்பட்ட தொழிலாளர்களும் வருவார்கள், அவர்களுடைய அபிப்ராயத்தையும் நாம் கேட்கலாம். ஏப்ரல் மாதம் வேண்டும் என்றாலும் இந்த சபையை மீண்டும் கூட்டி அப்பொழுது இந்த மசோதாவைப்பற்றி முடிவு செய்யலாம் என்று தோன்றுகிறது. அதுவரையிலும் ஆலோசனை பண்ணலாம் என்று தோன்றுகிறது. வேண்டும் என்றால் ஏப்ரல் முதல் தேதியிலிருந்தே வசூலித்துக்கொள்ளும்படியான ஏற்பாடு செய்துகொள்ளலாம் என்று தோன்றுகிறது. ஆகவே இந்த மசோதாவை செலெக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த திருத்தத்தை சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்."

* THE HON. SRI M. A. MANICKAVELU :—" Sir, I oppose
10-55 a.m. this amendment for referring this Bill to a Select Committee. I respectfully submit that though many hon. Members spoke, they have not made out even a *prima facie* case for referring this Bill to a Select Committee.

" The principle of this taxation come under two categories, viz., manufactured tobacco and raw tobacco. As far as manufactured tobacco is concerned, we are already committed to the principle of taxing that variety, i.e., cigars and cigarettes by an Act of 1953. What we now propose to do under that head is this : Certain categories of cigars and cigarettes, viz., the lowest variety were not taxed under that Act. As regards the higher varieties, we have taxed them at 20 per cent, 30 per cent and 10 per cent and so on. What we propose to tax under this Bill is the cigarettes costing three pies and less. What is the rate of taxation? It is as low as $3\frac{1}{8}$ per cent. Originally the intention was to tax it at 5 per cent. But we have further reduced it to $3\frac{1}{8}$ per cent. The reason is this. The cigarette which is now sold at three pies will be sold at three pies only. On account of this taxation the price of the cigarette will not be raised. The manufacturers of cigarettes have undertaken that they will make adjustment for paying this tax from the margin of their profits and it will not be passed on to the consumer. So, there is no grievance as regards the poor man's luxury. For smoking a cigarette he will pay only three pies as he has been doing till now and this tax is not going to affect him at all. Therefore, the argument on that score falls to the ground.

" Then as regards manufactured tobacco, I mean the cigars of the lower variety, it is proposed to be taxed under the General

Sales Tax Act. Raw tobacco also will be taxed under the General Sales Tax Act. As I have already explained, it will be taxed only at one point. The manufactured tobacco will be taxed at the sale point when the first sale takes place in the State. Raw tobacco will be taxed at the purchase stage when the first purchase is made in the State. The rate also is to be very low, viz., six pies per rupee.

" Some hon. Members alleged that this taxation will affect the cottage industry. It will not affect the cottage industry at all, Sir. This taxation is only on a turnover of Rs. 10,000 and over and therefore, all these small cottage industries, viz., manufacturing beedies on the pials or on the streets which have been referred to by some hon. Members, will not be affected. In fact the grievance of the bigger manufacturer is that he will be taxed, while the other small beedi manufacturers who do it on a cottage scale will not be affected, and therefore, he will be under a handicap. Therefore, it is only the bigger manufacturer that will be affected.

" It has already been said that the idea is not to have any social reform legislation through this Bill. We need not go into that point here. 11 a.m

" As regards the huge profits made by the proprietors of cigar and tobacco factories, there are different opinions. It is said that the lawyer's profession is a lucrative one. But it is only a few lawyers who make much money. There are other lawyers who are not able to make both ends meet. They are living from hand to mouth. Similarly, in the beedi and cigar industries, there are people who make money and others who do not make money. Anyway, they are much better off than some of the lawyers.

" Reference was made to the duty levied by the Central Government. Before 1953, we did not tax manufactured tobacco, because the Central Government levied the excise duty and they gave us some share. In the year 1953 the Central Governmnt prevented us from taxing it. Now, they say, ' You can go on with your own taxation.' So, it is not peculiar to this industry alone. For instance, let us take cloth. There is an excise duty on cloth. The Local Government also levy a sales tax on cloth. Therefore, the policy is in tune with the taxation of other commodities.

" The hon. the Deputy Leader of the Opposition said that this tax would affect the manufacturer and exporter of these cigars and cigarettes. I submit it will not affect them because all inter-State transactions will be outside the purview of this Bill. There will be no extra cost for the poor whether the person concerned is a smoker or a small manufacturer. Only the bigger proprietors are proposed to be taxed and that too at one point. Further, I

have given notice of an amendment by which there will be no double taxation, that is, taxing the raw tobacco as well as the manufactured tobacco. The hon. Member from Tiruchirappalli need not have any anxiety about it.

"I am really surprised at the attitude of the hon. the Deputy Leader of the Opposition. Yesterday in the Business Advisory Committee we came to the decision that this Bill would be taken up and finished to-day. That being so, I do not know why he now wants the Bill to be referred to a Select Committee."

SRI M. KALYANASUNDARAM :—"Even in the Business Advisory Committee meeting I said that the Bill might be taken up in the next session. It was the Hon. the Finance Minister who said, 'No, we want to finish it in this session itself."

* THE HON. SRI M. A. MANICKAVELU :—"We generally go by what we conclude. We do not take into consideration what was said earlier. We come to some decision and we must adhere to it."

SRI A. RAMASAMI TEVAR :—"The Hon. the Minister for Revenue has not answered my point. He has not said whether he is going to levy sales tax on bandroll."

* THE HON. SRI M. A. MANICKAVELU :—"This also comes under 'manufactured tobacco'. Others also pay excise duty. Why should a distinction be made in one respect? On a cottage scale, it will be exempt from tax."

11-7 a.m. SRI M. KALYANASUNDARAM:—"Band ரோல் என்பது ஒரு வகையான சுருட்டு என்று மந்திரியார் அவர்கள் உணர்ந்திருப்பதாகத் தெரிகிறது. Band ரோல், சுருட்டு அல்ல. Band ரோல் என்பது சுருட்டின்மேல் போடும் excise duty வரியின் அடையாளம். இந்த duty 40 சத விகிதம் போட்டிருக்கிறார்கள் மத்திய சர்க்கார். அதாவது நூறு ரூபாய் சுருட்டுக்கு 40 ரூபாய் வரி. இப்போது கொண்டுவந்திருக்கும் புகையிலை விற்பனை வரி மசோதா பிரகாரம், இந்த excise duty-க்கும் சேர்த்துத்தான் விற்பனை வரி போடுவதாக இருக்கிறது. ஆகவே, இந்த புகையிலை விற்பனை வரி போடும்போது இந்த excise வரி தள்ளி மற்ற தொகைக்கு இந்த விற்பனை வரி போடுவாரா என்பதை, கனம் மந்திரி அவர்களை கேட்க விரும்புகிறேன்."

SRI A. RAMASAMI TEVAR :—"In the interest of the cigar manufacturer, I appeal once again to the Hon. Minister to consider sympathetically the question of exempting the bandrolls from tax."

Now, therefore, in pursuance of Article 252 of the Constitution of India, this Assembly resolves that the Act aforesaid be adopted in the State of Madras and shall apply to matters which fall within entry 48 in List II (State List) of the Seventh Schedule to the Constitution of India.'

Sir, estate duty is a levy on the principal value of all property, settled or not settled, which passes on the death of a person to his heirs or successors-in-law. Under Article 269 of the Constitution of India, estate duty in respect of property other than agricultural land has to be levied and collected by the Government of India and assigned to the States. Under item 48 of List II in the Seventh Schedule to the Constitution, the State Legislature has got the power to legislate in regard to estate duty in respect of agricultural land. Under Article 252 of the Constitution, if it appears to the Legislatures of two or more States to be desirable that any of the matters with respect to which Parliament has no power to make laws for the States except as provided in Articles 249 and 250 should be regulated in such States by Parliament by law, and if resolutions to that effect are passed by all the Houses of the Legislatures of those States, it shall be lawful for Parliament to pass an Act for regulating that matter accordingly, and any Act so passed shall apply to such States and to any other State by which it is adopted afterwards by resolution passed in that behalf by the House, or, where there are two Houses, by each of the Houses of the Legislature of that State. The Parliament has passed the Estate Duty Act, 1953 (Central Act XXXIV of 1953), providing for the levy of estate duty on property including agricultural land, and it has come into force with effect from 15th October 1953. The Legislatures of certain other States had already passed resolutions that the levy of estate duty in respect of agricultural land in those estates be regulated by a Central Estate Duty Act. Under section 5 (2) of the Act, the Central Government may, by notification in the official Gazette, add the names of any other States to this schedule in respect whereof resolutions have been passed by the Legislatures of those States under Article 252 of the Constitution adopting the Estate Duty Act, 1953, in respect of estate duty on agricultural land in those States. Sir, unless this resolution is passed by both the

Houses of the Legislature of this State and the name of this State is included in the first Schedule of the Estate Duty Act, 1953, estate duty in respect of agricultural land cannot be levied in this State. It is only in pursuance of that object that this resolution has been brought forward. This resolution has already been passed in the Legislative Council. Now, the resolution is now before this House for being passed."

MR. SPEAKER :—" Resolution moved—

' Whereas Parliament has passed the Estate Duty Act, 1953 (Central Act XXXIV of 1953), and whereas it is desirable that estate duty in respect of agricultural land also should be regulated in the State of Madras by that Act;

Now, therefore, in pursuance of Article 252 of the Constitution of India, this Assembly resolves that the Act aforesaid be adopted in the State of Madras and shall apply to matters which fall within entry 48 in List II (State List) of the Seventh Schedule to the Constitution of India.' "

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" Mr. Speaker, Sir, this is a resolution which we can support wholeheartedly and I support the resolution with all the ' force ' at my command. Sir, the Estate Duty Act, 1953, passed by the House of the People and assented to by the President of India is a very important piece of legislation and will come into force in this State in respect of agricultural land only if both the Houses of the Legislature of our State pass a resolution similar to the one now before us. Sir, we are entitled to know what the provisions of the Estate Duty Act, 1953, passed by the House of the People are. Whenever a Central Act is discussed on the floor of this House, it was the practice or convention to supply copies of the Central Act to all Members of the House. I am surprised to see that no copies of the Central Act have been distributed to Members of the House."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" I got a copy from the hon. Deputy Leader of the Opposition."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" It is our right to get copies of the Act and it is the duty of the Government to distribute them. Anyhow, it was not done . . ."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" This resolution has been in the agenda for a long time and if any hon. Member was serious enough and wanted a copy of the Central Act, I would have been the first person to provide him with a copy. The hon. Member wanted to level some charge or other . . ."

MR. SPEAKER :—" This Act has been published in the *Fort St. George Gazette*."

2nd April 1955]

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Copies of the *Fort St. George Gazettes* are supplied to hon. Members. But the hon. Member does not take care to go through it and wants to blame the Government on some pretext or other."

SRI M. KALYANASUNDARAM :—" I wish to say this on this point. The Hon. Minister should not take everything as 'a charge against the Government'. What the hon. Member wants to point out is that copies of the Central Act should be made available to Members for ready reference. The Central Act was published in the *Fort St. George Gazette* at the time when it was passed in the House of the People. When certain political parties function on an organized basis, they can make some arrangements to get copies of the Act. But there are Members in this House who do not belong to any Party and they have got to be helped. It is only a request made that whenever a Central Act is discussed on the floor of this House, the original Act or the relevant portions of the Act may be supplied to Members of this House."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" I could understand the Hon. the Minister for Finance taking exception to my remarks. This Central Act was published in the *Fort St. George Gazette* in 1953. I have gone through the Act and after going through it, I have made even notes, then and there. But I was not aware that this resolution would be discussed now. Anyhow, I do not wish to deal with that matter any further.

" My only regret is that this resolution ought to have been passed by this Legislature very much earlier. Anyhow, at a time when we are short of funds and when we are thinking of imposing additional taxes, it is good that we are passing a resolution of this type so that we may get more revenue. I hope that no Member in this House will oppose this resolution. I have seen stated in the Press arguments to the effect that the adoption of this resolution would affect the formation of capital. There is no basis for such arguments. My submission is that this is not a revolutionary measure at all. This measure will not, in practice, result either in the abolition of classes or the removal of the proved disparity between the rich and the poor in the existing society. This measure imposes only a duty on unearned income and to that extent it may be called a progressive measure. But there are some exceptions. The privy purses of rulers have not been touched. Some of the establishments set up in foreign countries have not been touched. There are many loopholes in the Central Act, which ought to have been removed. But we are not entitled to do that. We have either to adopt the Act in its entirety or not. But, something is better than nothing and to that extent, I fully endorse and support the motion for the acceptance of this resolution."

*SRI M. NARAYANA KURUP :—" Sir, I do not wish to say much except that I support this resolution. If this Central Act

is properly worked, of course, we may expect some substantial contributions to the finances of our State. The Central Parliament has taken great care to cover all loopholes and to see that there is no evasion in payment of the tax. Even in England where Estate Duty is being levied for a long time people try to evade the tax by all sorts of ways. I hope the Central Government will take steps to deal with evasions, if any. Inasmuch as it has been pointed out that this is not a revolutionary measure and inasmuch as we want all welfare measures to be adopted in this State, I hope that those affected by this measure will try to pay the tax honestly and not to avoid payment by using all their ingenuity in the general interest of the State.''

* SRI K. PARTHASARATHY :—'' Sir, I welcome the resolution that has been moved by the Hon. the Minister for Revenue. It is a very happy thing that soon after the 60th Session of the Indian National Congress held in this State recently we are passing this resolution.

1-20 p.m. '' The effect of this Resolution is not that the Estate Duty is levied in this State for the first time. It is already there and it is applicable to this State also. The only thing is that it did not apply in respect of agricultural lands. Hon. Members may also find that for the year 1954-55, already some amount was received by our State from the Union Government towards our share of the Estate Duty. What we are seeking to do by this resolution is to extend it to agricultural lands. This has been passed by the Council and if the resolution is passed by this House also, the Estate Duty Act will be made applicable in respect of agricultural lands also. That is a very good attempt and that will go a long way in removing the existing disparity in property value of very rich persons and very poor persons. I am sure the revenue that will be received from this duty will be utilized for the upliftment of the poor people.

'' One important feature about this duty is that the net proceeds derived from non-agricultural property are given back to the State. In respect of income-tax, only a percentage of the tax that is derived from income-tax is handed over in proportion to the State concerned. But in respect of this Estate Duty, the welcome feature about it is that the net proceeds are entirely handed over to the States for the utilization of that amount by the State. By virtue of this extension of the Duty to agricultural lands also, we may expect a sizeable income from that sector and I am sure it is a happy thing that this resolution is being supported by all sides of the House.''

SRI K. T. RAJU:—'' கனம் சபாநாயகர் அவர்களே, கனம் ரெவினியூ மந்திரி அவர்கள் கொண்டுவந்த மரண வரி சம்பந்தமான தீர்மானத்தை நான் முழுமனதுடன் ஆதரிக்கிறேன். நீண்டகாலமாக நம்முடைய நாட்டில் ஒரு சிலர் மிகப்பெரிய அளவுக்கு நிலங்களைத் தங்களுக்குச் சொந்தமாக வைத்துக்கொண்டு அவர்கள் தங்களுடைய சொத்துரிமையை பாதுகாத்து வந்தார்கள் . ஏழ்மையும் வறுமையும் அதிகரித்து பின்தங்கிய

நம் நாட்டில் மேலும் மேலும் சொத்துக்கள் ஒரு சிலரிடத்தில் சேர்ந்து வருவதைத் தடுக்கவேண்டுமென்று விவசாய மக்கள் கிளர்ச்சி செய்துவந்தார்கள். பார்லிமென்டில் 1953-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கும் மரணவரிச் சட்டம் நம்முடைய ராஜ்யத்தில் அமுலாக்கப்படவேண்டுமென்று இந்தத் தீர்மானம் கோருகிறது. இந்தத் தீர்மானம் இந்த ராஜ்யத்தில் அமுலாக்கப்படுவதன் மூலம் எவ்வளவு வருமானம் கிடைக்கும் என்பது இந்த ராஜ்யத்தில் ஏற்படும் சாவைப் பொறுத்திருக்கிறது."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" பணக்காரர்களின் சாவைப் பொருத்திருக்கிறது."

SRI K. T. RAJU :—" ஆம், பணக்காரர்களின் சாவைப் பொருத்திருக்கிறது. எத்தனை பேர்கள் இறப்பார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும் ? முடியாது. ஏனென்றால் எமனுக்கும் நமக்கும் தொடர்பு கிடையாது. ஆகவே, இவ்வளவு தான் வருமானம் வரும் என்று நிச்சயமாகச் சொல்லுவதற்கு நம்மால் முடியாது. புகையிலைக்கு விற்பனை வரி போடப்பட்டபோது சுமார் 50 லட்சம் ரூபாய் வரும் என்று உத்தேசமாகச் சொல்லப்பட்டது. அதே மாதிரி மரண வரியின் மூலமாக எவ்வளவு வருமானம் வரும் என்று திட்டமாகச் சொல்லுவதற்கு முடியாது. குறிப்பிட்ட அளவுக்குமேல் சொத்து வைத்திருப்பவர்கள், அல்லது குறிப்பிட்ட அளவுக்குமேல் கிஸ்தி செலுத்துபவர்கள் இறந்தால்தான் மரண வரி போடமுடியும் என்று நிர்ணயம் இருக்கிறது. அப்படிப்பட்ட பணக்காரர்கள் அல்லது நிலப்பிரபுக்கள் ஒவ்வொரு வருஷத்திலும் எவ்வளவு பேர்கள் இறப்பார்கள் என்று தெரியாதாகையால் ஒன்றும் சொல்லுவதற்கில்லை. இருந்தாலும் கொள்கையளவிலே இந்தத் தீர்மானம் வரவேற்கத்தகுந்தது. ஏராளமான நிலங்களை வைத்திருக்கக்கூடிய ஒரு சிலரிடத்தில் மேலும் மேலும் நிலங்கள் சேருவதைத் தடுப்பதற்கும். அளவைக் குறைப்பதற்கும் ஏற்ற சட்டம் இது. ஆகையால், சமுதாயத்தில் நீண்ட காலத்திற்குப் பிறகு ஒரு நல்ல நிலைமை ஏற்படக்கூடும் என்ற முறையில் இது இருக்கிறது. அதிகமான நிலங்கள் ஒரே இடத்தில் குவியாமல் தடுப்பதற்கேற்ற முறையில் இது ஆரம்பப் படியாக இருக்கிறதாகையால் இதையே நாங்கள் வரவேற்கிறோம். மேலும் பலர் வரி கொடுக்காமல் ' டிமிக்கி ' கொடுக்க பார்த்துக்கொண்டிருப்பார்கள். தங்களுடைய சொத்துக்களை பலருக்குப் பிரித்துக்கொடுத்துவிட முயற்சிப்பார்கள். இருந்தாலுங்கூட இது ஆரம்ப நடவடிக்கையாக இருப்பதால் பொதுவாக இது வரவேற்கத்தகுந்தது. நம்முடைய ராஜ்யத்தில் அந்தச் சட்டம் அமுலாக்கப்படவேண்டுமென்று கொண்டுவந்திருக்கும் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன்."

SRI P. RANGASWAMI REDDIAR :—" Mr. Speaker, Sir, I wish this resolution had been brought some months back. Soon after the Estate Duty Act was notified and it came into force, the previous day, some rich people died (laughter) and escaped the death duty; but for this, a considerable sum might have been collected by the Central Government. I do not want to mention the names of such persons. There are clever people in the world who not only live wisely but also die wisely just to escape death duty, but there are also cleverer people who escape the duty by circumventing the provisions of the Act, just as making some provisions for stridhanam, alienating by partition and so many other things.

" I think this Resolution will be passed by this House as a whole without any amendment as it is really a welcome measure. In due

course with the collection of the duty, our State Government should not lag behind other States in pressing for our due share of the amount which the Centre collects from our State. Some months back I read in the papers, that the estate duty collected in Bombay was the highest in the whole of India. Perhaps it might be due to circumstances prevailing there. But here there is some fear among agriculturists and mirasdars. Already land is taxed here much and agriculturists and mirasdars are burdened and overburdened with taxes and this measure may be misconstrued as biting the poor agriculturists. It should be noted particularly that this will apply only to big mirasdars who hold large extents of lands and who are paying large sums by way of kist; only where the total value of lands exceeds Rs. 50,000 including other assets, it would be liable to be taxed and poor persons will never be affected but only big landlords would be affected. Therefore, this is a just measure and nobody can take its aim as taxation. Thank you, Sir."

* SRI P. SELVARAJ :—" Mr. Speaker, Sir, it is the Divine Will that man should care to share his possession with the needy and the poor. But at the present time because of social complexities and man's ingenuity, we have been trying to amass wealth for our own kith and kin, for our selfish ends. But, Sir, the time has come when humanity must know and man must know that he must try to give his neighbour one when he has two and it is quite in conformity with our present structure of society. The Congress resolution is that we should have a Socialistic Pattern of Society where individuals cannot have much when compared to society. So, Sir, though after a very long time, the Central Government have passed this Estate Duty Act by which a major portion of the moneys would be taken away by way of duty. But the Central Government could assess only duty on immovable and other properties, but as for the agricultural property, it is left to us to pass a Resolution making the tax complete. On account of this in many cases the Government are not levying death duty; I know in certain cases people have died leaving large estates and they have not been assessed, because the respective Assembly has not passed a resolution. So, Sir, in supporting this resolution, I think the earlier we pass this resolution, the better it would be. Thank you, Sir."

12-30 p.m. * SRI V. R. NAGARAJAN :—" I support this resolution, Sir. The first reason for my supporting it is that the charge often made against the Government that they are generally afraid of going near the capitalists will be taken away. Our country is predominantly agricultural and estate duty in respect of agricultural property whenever death of a landed aristocrat takes place will fetch us enough of money, so that our State which is already deficient in its annual revenue just like many other States in this country will be able to make good in the matter of the annual budgetting. There is also another reason why this resolution should be supported. Under our Constitution having regard to its general spirit discrimination is not allowed. The treatment given to the citizens of this

country is uniform, whether they are pursuing different occupations in life or whether rich or poor. Having regard to the general spirit of the Constitutions Act itself, now that we are called upon to support this resolution for levying duty on agriculturists also, we will be taking away that discrimination which has been in force till now. Up to this date from 1953 after the passing of the original Act by the Parliament, estate duty was being collected only on non-agricultural and industrial properties. Now that distinction goes and we will be able to collect enough of tax on this account. By this, no doubt, we do not anticipate that many people must die or are going to die. That is not our intention. But when persons die on account of natural causes, we levy this duty, and that is a good sign of our country's progress.''

12-33 p.m.

SRI M. P. SUBRAMANYAM :—" கனம் தலைவர் அவர்களே, கனம் ரெவின்யூ மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கும் தீர்மானத்தை நாங்கள் மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம். அரசாங்கத்தார் கொண்டுவரும் எல்லாவற்றையும் எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் எதிர்த்துக்கொண்டுதான் இருப்பார்கள் என்று சிற்சில சந்தர்ப்பங்களில் சர்க்கார் தரப்பில் உள்ளவர்கள் பிரசாரம் செய்வது பொய் என்று நிரூபிப்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகளில் இதுவும் ஒன்று. பொதுமக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய எந்த விஷயத்தையும் எதிர்க்கட்சியினர் ஆதரிப்பார்கள் என்பதற்கு இது ஒரு தக்க சான்று.

" விவசாயத்துறை அல்லாத எஸ்டேட் வரி சட்டத்தை விவசாயத்துறையிலும் கொண்டுவருவது மிகவும் உசிதம். ஸ்ரீ வி. ஆர். நாகராஜன் கூறுவதுபோல மற்றத்துறைகளைவிட விவசாயத்துறையில் பெரும்பாலோர் நெருங்கியிருப்பதால் இதற்கும் மரணவரி சட்டம் இருக்கவேண்டுவது அவசியம். இதன் மூலம் சர்க்காருக்கு வருமானம் கிடைக்கும் என்பதற்காக இதை நாங்கள் ஆதரிப்பதைத் தவிர இந்த தீர்மானத்தின் கொள்கையை நாங்கள் பாராட்டுகிறோம். பொதுவாக நாட்டிலுள்ள எல்லா அரசியல் கட்சிகளும், ஓரளவு சமதர்மத்தை நோக்கி செல்லவேண்டுமென்று பேசிக் கொண்டு வருகின்றன. அதற்கு அறிகுறியாக இந்த தீர்மானம் கொண்டு வந்திருப்பதுபற்றி நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். ஒருவன் உழைக்காமல் இறந்தவருடைய சொத்துக்கு உரியவனாக இருந்து சோம்பேரியாவதை தடுத்து சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வை நீக்குவது என்ற முறையில் பெரிய வெற்றியளிக்காவிட்டாலும் இது ஒரு முதல்படியாக இருக்கிறது என்பதற்காக இந்தத் தீர்மானத்தை நாங்கள் மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம்.

" எஸ்டேட் வரியின் மூலம் கிடைக்கும் வருமானம் முழுவதும் நம்முடைய ராஜ்யத்திற்கே கிடைக்கும் என்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன் என்று சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

12-35 p.m.

SRI P. S. KRISHNASWAMY AYYANGAR :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த தீர்மானத்தை யாவரும் ஆதரிக்கவேண்டியது தான். ஆனால் இந்தத் தீர்மானம் சில சந்தேகங்களை மாத்திரம் ஜனங்களிடையே பரப்பும் என்ற பயம் எனக்கு இருக்கிறது. அரசாங்கம் நிலச் சீர்திருத்தம் கொண்டுவருகிறோம், உயர்ந்த பட்சவரம்பு நிர்ணயிக்கப் போகிறோம், அப்பொழுது ஏற்றத்தாழ்வு நீங்கிவிடும் என்று சொல்லிக் கொண்டு இருக்கும் இந்தத் தருணத்தில் இம்மாதிரி தீர்மானத்தை நாம் நிறைவேற்ற முயற்சிக்கிறோம். பெரும் பணக்காரர்கள் ரொம்பபேர்கள் இருப்பார்கள். அவர்கள் சாஸ்வதமாகவே இருந்துகொண்டிருக்கக்கூடும் என்ற சந்தேகம் ஜனங்களிடையே ஏற்படலாம். பணக்காரர்கள் இறந்த பிறகு அவர்களுடைய சொத்து வார்சுகளுக்கு போகிறது. அந்த

சொத்தின் மீது வரிபோடுவோம் என்று சொன்னால் பணக்காரர்கள் இன்னும் ரொம்பகாலம் இருக்கும்படியாக விடப்போகிறோம் என்பதாக ஜனங்களுடைய மனதில் ஒரு சந்தேகத்தை உண்டு பண்ணும். அதி சீக்கிரத்தில் ஒருவர் வைத்திருக்கக்கூடிய நிலங்களுக்கு அதிகபட்ச வரம்பு நிர்ணயிக்கப் போகிறோம், நிலச்சீர்திருத்தத்தை கூடிய சீக்கிரம் கொண்டுவரப்போகிறோம் அதனால் நாட்டில் சமமான ஒரு நிலைமை ஏற்படும் என்று சொல்லிக் கொண்டுவரும் இந்தக்காலத்தில் மரணவரி சம்பந்தமான இந்தத் தீர்மானத்தை நாம் ஆதரிப்போமானால் ஜனங்களிடைய ஒரு பயம் ஏற்படக் கூடும். இப்பொழுது இருக்கும் ஏற்றத்தாழ்வுகள் எப்பொழுதும் சாஸ்வதமாக நீடித்துக்கொண்டு இருக்குமோ, அதிக சீக்கிரத்தில் நிலச்சீர் திருத்தம் கொண்டுவரப்போகிறோம் என்று சொல்லுகிறார்களே, அது நம்மை ஏமாற்றுவதற்குத் தானே என்று எண்ணக்கூடும். ஆகையால் இந்த **Aspect**-ஐ மனதில் வைத்து இவ்வளவு சீக்கிரத்திலே நாம் இந்தத் தீர்மானத்தை இந்தச்சபையில் நிறைவேற்றவேண்டுமா என்பதை யோசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

12-37 p.m. SRI M. KALYANASUNDARAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நான் முழுமனதுடன் என்னுடைய சார்பிலும் எதிர்க்கட்சியினர் சார்பிலும் ஆதரிக்கிறேன். இந்த மாதிரித் தீர்மானங்கள் வரும்போது கட்சி அடிப்படையில் பார்ப்பது கிடையாது, பணக்காரர்கள் ஏழை என்ற அடிப்படையில் எந்தக் கட்சியாக இருந்தாலும் பிரிந்து நிற்பதை நாம் பார்க்கமுடியும். காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே இருக்கும் பணக்காரர்கள் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு இந்தத் தீர்மானத்தின் மீது ஒன்றும் பேசாமல் இருக்கலாமேயொழிய நம் நாடு முன்னேறவேண்டும் என்ற கருத்து உடையவர்கள் எல்லோரும், அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தாலும் ஆதரிக்கத்தான் செய்வார்கள்.

" ஆனால் ஒரு விஷயத்தை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்த வரியானது நாட்டில் பெரியதொரு புரட்சியை உண்டாக்கிவிடப்போகிறதென்றோ, சமுகத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளை அடியோடு நீக்கிவிடப்போகிறதென்றோ நினைத்து நான் இதை ஆதரிக்கவில்லை. ஓரளவுக்கு நல்ல அம்சம் உடைய ஒரு தீர்மானம் என்ற அடிப்படையில்தான் இதை ஆதரிக்கிறேனே தவிர இதனாலேயே நாட்டிலுள்ள ஏற்றத்தாழ்வுகள் நீங்கி வறுமை ஒழிந்து, வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை தீர்ந்து சுபிட்சத்தை ஏற்படுத்த முடியும் என்ற எண்ணத்தினால் அல்ல என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். சர்க்கார் அந்த மாதிரியாக நம்பவில்லை என்று கனம் நிதி மந்திரி அவர்கள் சொல்லுகிறார்கள். அப்படியானால் ரொம்ப சந்தோஷம். சர்க்கார் உத்தேசத்தில் இருக்கக்கூடிய நிலச்சீர்த் திருத்தம்போன்ற சீர்திருத்தங்களைத் துரிதமாகக் கொண்டுவந்து அதன் மூலம் விவசாயிகளினுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி நாட்டில் சுபிட்சத்தை உண்டாக்கமுடியுமே தவிர நிலச்சீர்த்திருத்தத்தை ஒத்திப்போட்டு இத்தகைய வரிகள் வருவதினால் மட்டும் பெரிய பெரிய மாறுதல் ஏற்பட்டுவிடும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை.

" 1953-ம் வருஷத்தில் லோக்சபையில் இந்த சட்டத்தை நிறைவேற்றக்கூடிய காலத்தில் சுலபமாக முடிந்துவிட்டது. அதேபோல் இந்த சபையில் பார்த்தாலும் அநேகமாக இந்தத் தீர்மானத்தை எதிர்த்துப்பேசுவதற்கு ஒருவரும் இல்லை. நண்பர் ஸ்ரீ பி. எஸ். கிருஷ்ணசாமி ஐய்யங்கார் பேசியபோதுகூட இப்பொழுது இருப்பதைக்காட்டிலும் இன்னும் தீவிரமாக இருக்கவேண்டுமென்றுதான் அவர் சொல்லியிருப்பதாக நினைக்க வேண்டியிருக்கிறதே தவிர இந்தத் தீர்மானத்தை வேண்டாமென்று சொன்னதாக எடுத்துக்கொள்ளவதற்கில்லை. நிலச்சீர்த்திருத்தம் வருவது ஒத்திப்போட்டுவிடப்படுமோ என்ற பயந்தான் அவர் குறிப்பிட்டிருக்கிறார் என்று நினைக்கிறேன். இந்த சபையில் எல்லாத்தரப்பினரும் இதை ஆதரித்து இது எப்படி சுலபமாக முடிந்தது என்பதை நாம் பார்க்க வேண்டும். பத்து வருஷத்திற்கு முன்னால் இம்மாதிரி சட்டம் இவ்வளவு

சுலபமாக நிறைவேறி இருக்குமா என்று சொல்லமுடியாது. இம்மாதிரி சட்டத்தை அன்று இருந்த சர்க்கார் கொண்டுவந்து இருக்காது. கொண்டு வந்திருந்தாலும் சபையில் எப்படிப்பட்ட எதிர்ப்பு இருக்கவேண்டும் என்பதை நாம் பார்க்கவேண்டும். இப்பொழுது இவ்வளவு சுலபமாக இந்தத் தீர்மானம் எல்லாத்தரப்பினராலும் ஆதரிக்கப்பட்டு நிறைவேறும் தருவாயில் இருப்பதற்குக் காரணம் என்ன ? இந்த நாட்டில் தொழிலாளர்கள், விவசாயிகள் இயக்கம் வளர்ந்து அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை உயர்த்திக்கொள்ளவேண்டும் என்பதற்காகவும் போராடிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதில் அவர்களுடைய போராட்டத்தின் வெற்றிதான் என்று சொல்லவேண்டும். ஏழை பணக்காரர்கள் என்ற வித்தியாசம் ஒழிந்து சோஷலிசத் தன்மைவாய்ந்த சமுதாயம் அமையவேண்டும் என்று சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதற்குச் சாதகமாக இருந்து இருப்பது தொழிலாளி விவசாயிகளினுடைய இயக்கம்தான். பணக்காரர்களுக்கு வரி, நிலச்சீர்த்திருத்தம் கொண்டுவரப்போகிறோம் என்று சொல்லக்கூடிய சூழ்நிலை வந்திருப்பதற்குக் காரணம் தொழிலாளிகள், விவசாயிகளின் போராட்டமும்தான். கம்யூனிஸ்ட்கள் செய்திருக்கக்கூடிய தியாகமும்தான் இதற்கு ஒரு காரணம் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மாதிரி கருத்து நாட்டிலே வளர்ந்திருப்பதற்கு கம்யூனிஸ்டுக்கட்சி செய்திருக்கும் தொண்டு என்று கம்யூனிஸ்ட் கட்சி பெருமைப்படவேண்டிய நிலைமையில் இருக்கிறது. சர்க்கார் இந்தத் தீர்மானத்தைக்கொண்டுவந்து இவ்வளவு சுலபமாக நிறைவேற்றுவதற்கேற்ற சூழ்நிலையை உண்டாக்கியிருப்பதற்கு எங்கள் கட்சி பெரிய அளவுக்கு உதவி புரிந்திருக்கிறது என்று சொல்லமுடியும். யார் பெரியவர், யார் சிறியவர் என்ற போட்டியைப் பற்றிச் சொல்லவில்லை. தொழிலாளர்கள், விவசாயிகள் இயக்கம் நாட்டில் வளர்ந்திருப்பதன் காரணமாகத்தான் இம்மாதிரி சீர்த்திருத்தங்களை சர்க்கார் கொண்டுவரமுடிகிறது. அப்படி கொண்டு வருவதை சுலபமாக ஆக்கித்தருவதற்கு விவசாயத் தொழிலாளர்கள் இயக்கம்தான் காரணம்.

" தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் சர்க்கார் பாதுகாப்பு கொடுக்காவிட்டாலும், இடையூறு செய்யாமலாவது இருக்கவேண்டும். பொது ஜன இயக்கங்கள் வளருவதற்கு சர்க்கார் இடையூறாக இல்லாமல் இருக்க வேண்டுமென்று நான் இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப்பேசக்கூடிய சமயத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

" நாட்டில் விவசாயிகள் நடத்தக்கூடிய சில கிளர்ச்சிகளைப் பற்றி சர்க்கார் கண்ணோட்டம் கவலை தரக்கூடியதாக இருக்கிறது. சில தினங்களுக்கு முன்பு கடையநல்லூர் விவசாயிகள் கைதுசெய்யப்பட்டார்கள், சிறையில் அடைக்கப்பட்டார்கள். அவர்களுடைய கோரிக்கையைப்பற்றி முன்னமேயே சொன்னேன். இந்த மாதிரி நேரங்களில் நிலச்சீர்த்திருத்தம் கொண்டுவரப்போகிறோம் என்று பிரசாரம் செய்யச் செய்ய இந்த மாதிரி நிலப்பிரபுக்களிடமிருந்து விவசாயிகள் மீது தாக்குதல் ஏற்பட்டாலும் விவசாயிகளுக்கு பாதுகாப்பு உபயோகப்படுத்தவேண்டுமே தவிர நிலப்பிரபுக்களுக்கு பாதுகாப்பு கொடுக்கக்கூடாது. நேர்மையாக உபயோகப்படுத்தினால் கஷ்டப்படுகிற விவசாயிகளுக்கு பாதுகாப்பு கொடுக்கமுடியும். விவசாய இயக்கத்திற்கு பாதுகாப்பு கொடுக்கமுடியும். விவசாயிகளின் மீது போடப்பட்டிருக்கும் அக்கிரமமான வழக்குகள் வாபஸ் பெறப்பட்டு போலீஸ்காரர்கள் இம்சை செய்யாமல் இருக்கும்படியான முறையில் போலீசை நிர்வகிக்கவேண்டுமென்று நான் கனம் நிதி மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்பொழுதுதான் மற்றச் சீர்த்திருத்தங்களைக் கொண்டுவருவதற்கு சுலபமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"இந்த வரியைப்பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன். இந்த வரியில் ஓரளவுக்கு சில நல்ல அம்சங்கள் பொருந்தியிருக்கின்றன. ஆனால் இன்றைக்கு நாட்டிலே நிலப்பிரபுக்கள் அல்லாமல் தனி நபர்களும் நிலங்கள் வைத்திருக்கிறார்கள். இப்படித் தனி நபர்களில் பண்டார சந்நதிகள் அதிகமான நிலங்களை வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை என்ன? அவர்கள் நிலப்பிரபுக்கள் அல்ல. ஆலயங்களையோ, அல்லது அவர்களுடைய மதிப்பையோ குறைகூறுவதற்காகச் சொல்லவில்லை. கம்யூனிஸ்டுகளின் சொந்தக் கருத்து எதுவாக இருந்தாலும்கூட, தெய்வ வழிபாட்டிற்கு நாங்கள் எதிராக நிற்கவில்லை. உண்மையில் கடவுளை எண்ணக் கூடியவர்கள் வழிபடட்டும். ஆனால் கடவுளின் பெயரைச் சொல்லிக்கொண்டு ஏமாற்றுகிறவர்களைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம். இன்றைக்கு பெரிய நிலப்பிரபுக்களிடமிருக்கிற நிலங்களைக் காட்டிலும் அதிகமான நிலங்கள் பண்டார சந்நதிகளிடம் இருக்கிறது. அவர்களுடைய கையிலே இருக்கக்கூடிய நிலங்கள் என்னாகிறது? அவர்களை யார் கணக்கு கேட்பது? கடவுள் கேட்பாரா அல்லது மனிதர்கள்தான் கேட்பார்களா? கடவுள் அவர்களைக் கணக்குக் கேட்க முடியாது. மனிதர்களும் கேட்பதற்கு உரிமையில்லை. ரிலிஜியஸ் எண்டோமெண்ட் போர்டு கேட்பதற்கு அதிகாரமிருக்கிறது. ஆனால் அதற்கும் அதிக அதிகாரங்கள் கிடையாது. அப்படிப்பட்ட நிலைமையில் இந்த நிலங்கள் அவர்களுக்குப் பரம்பரைச் சொத்தாக இருந்து வருகிறது. அப்படிப்பட்ட நிலைமையில் அவர்கள் நிலப்பிரபுக்களைக் காட்டிலும் விவசாயிகளுக்கு உபத்திரவம் கொடுத்து வருகிறார்கள். யாரையும் குறைகூற வேண்டுமென்று சொல்லவில்லை. அவர்களுக்கு உலகப் பற்று இல்லாவிட்டாலும், தெய்வத்தையே எப்பொழுதும் நினைக்கக்கூடியவர்களாக இருந்தபோதிலும் அவர்கள் நிலப் பிரபுக்களைக் காட்டிலும் அதிகமான நிலங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய சொத்திலே கைவைப்பதற்கு முடியாது. இந்தத் தீர்மானத்தின் மேல் பேசக்கூடிய எல்லா விஷயங்களையும் லோக் சபாவிற்கு அனுப்பி வைக்கவேண்டும். அங்கேயும் அவர்கள் இதற்கான எந்த மாறுதல்களையும் செய்யாவிட்டால், இன்னும் அவர்கள் பலவிதங்களில் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். தங்களுடைய சொத்தில் ஒரு கணிசமான பகுதியை ஒரு இடிந்த கோயிலுக்கு எழுதி வைத்துவிட்டு, அந்தக் கோயிலுக்கு அவர்களே பரம்பரை டிரஸ்டியாக வந்துவிட வழியிருக்கிறது. பின்னர் அந்த சொத்துச் சம்பந்தப்பட்ட வரையில் ஒன்றும் செய்ய முடியாமல் போய்விடும். ஆகவே இந்தச் சட்டத்தில் இருக்கின்ற குறைபாட்டையும் இந்தச் சமயத்தில் எடுத்துக்காட்ட விரும்புகின்றேன். இந்தச் சட்டப்படி நமக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. இதற்குத் திருத்தம் கொண்டு வருவதற்கும் நமக்கு அதிகாரமில்லை. பேசக்கூடிய சமயத்தில் பேசும் விவரங்களும் அங்கு போகட்டும். இன்னும் இதையெல்லாம் வைத்துக்கொண்டு லோக் சபாவில் திருத்தங்கள் கொண்டு வந்து, திருத்த வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இவைகளை எடுத்துக்காட்ட விரும்புகின்றேன். இந்த வார்த்தைகளைக் கூறிக்கொண்டு இந்தத் தீர்மானத்தை ஆதரிக்க விரும்புகின்றேன். ஆனால் அதே சமயத்திலே ஒரு விஷயத்தை நாம் கவனிக்க வேண்டும். மனதிலே அமைச்சருக்கு திருத்தவேண்டுமென்ற எண்ணமிருந்தாலும், ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். சர்க்கார் நல்ல காரியம் செய்தால் அதை ஆதரிக்கிறோம். கெட்டதாக இருந்தால் பலமாக எதிர்க்கிறோம். ஆகவே எப்பொழுதும் நல்லதை ஆதரிப்போம்; கெட்டதைக் கண்டிப்பாக எதிர்ப்போம். இதிலே சில நல்ல அம்சங்கள் அமைந்திருப்பதால், இதை ஆதரிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்."

SRI N. RATHINA GOUNDER :—"On a point of information, Sir. கனம் சபாநாயகர் அவர்களே, குன்றக்குடி ஆதீனம், திருவாடுதுறை ஆதீனம், தர்மபுர ஆதீனம்போன்ற ஆதீனங்களில் பரம்பரையாக இருந்துவரும் தம்பிரான்கள் ஒருகால், சமாதி அடைந்துவிட்டால், அவர்களுடைய சிஷ்யர்கள் அந்த ஸ்தானத்தை எடுத்துக்கொள்ளுகிறார்கள்.

அந்தச் சந்தர்ப்பத்தில் இந்த மாதிரியான சட்டம் அவர்களுக்கு அமுலுக்கு வருமா என்பதை கனம் மந்திரி அவர்கள் விளக்கவேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறேன்."

* THE HON. SRI M. A. MANICKAVELU :—" Mr. Speaker, Sir, I am glad to note that we are so well tuning ourselves to the socialiastic pattern as seen from the unstinted support extended from all sections of the House. This estate duty is commonly known as death duty, that is, it takes effect after the person dies, in respect of his property. This Act was passed by the Central Legislature and it is in operation with regard to all other properties except land. Now, what we propose is that the landed property may also be taxed. That is the idea behind this resolution. We are not in a position to make any alteration because it is a Central Act. 12·40 p.m.

" The hon. Member Sri Narayanan Nambiar said that he was handicapped because he had not a copy of the Central Act with him. I think the idea in sending copies of the *Fort St. George Gazette* is to enable the Members to make use of the Gazette and not to throw it away and then complain that a copy of the Act is not with them. This Act was published in the Gazette. The Members could have made use of it. The resolution was on the agenda for a number of months. I do not know what further we can do.

" The hon. Member Sri Krishnaswamy Ayyangar said that if land reforms were to be introduced, we need not have recourse to this law. He said that this might cloud the issue. But land reform does not relate to only ceiling of a holding. It covers many points like fixation of rent, fixity of tenure, etc. So, the passing of this resolution will not affect the introduction of land reforms. Even if land reforms are introduced earlier or delayed, there is no harm in passing this Resolution. When the land reforms are introduced then this Resolution will become infructuous in the concerned respects.

" The hon. the Deputy Leader of the Opposition was supporting the Resolution. I do not know whether I should feel glad or sorry about the position of the Communist Party. I am afraid things have come to such a pass that the Communists want to clutch at every straw that the wind blows. Now, they have caught hold of straw. They are making much of the Resolution that I have brought forward. They are now trying to buttress their propaganda on my endevour. I sympathise with them and feel glad that they should fall in line with our endeavours."

MR. SPEAKER :—" The question is—

' Whereas Parliament has passed the Estate Duty Act, 1953 (Central Act XXXIV of 1953) and whereas it is desirable that Estate Duty in respect of agricultural land also should be regulated in the State of Madras by that Act;

ten lakhs of rupees to be set apart from this sum for the purpose. Even though we applied to the Government for diversion of funds, the then Government—the Congress Government in 1947 said that the trust was administered by the District Board and thought that the money belonged to it. This was a rural body. Money should not be used for urban boys. The fund did not and does not belong to the District Board. The District Board was only supervising the working of the Fund. The Government can change the management of the Fund and some other person may manage the trust instead of the District Board. The District Board at that time thought it was their money and the Government said that the Fund should be of use only to the rural people and that if a college was started urban boys might avail of the benefit. I cannot understand this statement that if a college is started only urban boys will get the benefit. There are a good number of boys in the village parts who want to study in colleges. So, I congratulate the Government on understanding the real position and bringing in this Bill.

" Then, Sir, I see an amendment has been given notice of to the effect that a medical college be started with the help of the funds. I am not against the starting of a medical college. Some talk was there in the Press about this. I know Dr. Alagappa Chettiar has come forward to donate 20 lakhs of rupees for this purpose. The Government also recently appointed a committee under the chairmanship of Dr. A. Lakshmanaswami Mudaliar to suggest a suitable place for the location of a Medical College—Tanjore, Karaikudi or any other place. Karaikudi has been chosen and I take it it is because Dr. Alagappa Chettiar comes from that place. For the present, it looks as if Tanjore will not be selected. Even otherwise, at least 50 lakhs of rupees is required to start a medical college. Dr. Chettiar has donated only 20 lakhs and 30 lakhs more may be necessary. The object of the members who have given amendments for the starting of a Medical College is that the present Rs. 5 lakhs may be diverted for the purpose of starting the Medical College; what I say is suppose we divert Rs. 5 lakhs for the purpose of Medical College, how are we to secure the balance of rupees that would be needed? Five lakhs of rupees will be nothing for a Medical College. How to secure the balance? That is the question. Therefore what I say is, no doubt we would prefer a Medical College to an Arts College. But the cost for starting a Medical College will be too much. Therefore what I say is, let us now support the diversion of Rs. 5 lakhs for the starting of Arts College, so that the Arts College may start functioning from this July onwards. Already a Committee has been constituted for this purpose and it has been registered under the Socie-ies Registration Act. The Committee is going to collect Rs. 2 akhs more. Moreover we are going to have an exhibition shortly nd we propose to collect something like Rs. 50,000 by way of at. That is why I say, if we now allow the diversion of Rs. 5 hs from the Chatram funds to be offered as a security for the

starting of an Arts College, then the College could start functioning from this July onwards. If on the other hand, as some hon. Members have suggested we divert the sum of Rs. 5 lakhs for the sake of a Medical College, then we could not get the balance that would be required. Therefore it would boil down to starting neither a Medical College nor an Arts College. It would become a waste. That is why I request hon. Members who had given notice of amendments for the diversion of Rs. 5 lakhs for the starting of a Medical College, to withdraw those amendments. Let us support the Bill unanimously; let us divert Rs. 5 lakhs from Chatram funds to be offered as security to the University for the starting of an Arts College. Let the Arts College start functioning from this July onwards. The University has all along been objecting to the starting of the Arts College because the security of Rs. 5 lakhs which is required under the regulations of the University for the starting of any Arts College has not been furnished. I am glad that the Government have now come forward with the present Bill, diverting Rs. 5 lakhs from Chatram funds for the purpose of being offered as security for the starting of the Arts College. This Bill is a timely one and if it is passed, we can have the College started this July itself. Therefore I hope this Bill may be passed unanimously.''

Sri S, RAMALINGAM :—" கனம் சபாநாயகர் அவர்களே சத்திரம் நிதியிலிருந்து சுமார் 4,94,000 ரூபாயை எடுத்துத் தஞ்சாவூரில் சர்க்கார் ஆர்ட்ஸ் காலேஜுக்கு ஒதுக்குவதற்கும், வருஷா வருஷம் வரக்கூடிய வட்டியிலிருந்து ரூ. 10,000, ரூ. 15,000 வரைக்கும் உதவி அளிக்கக்கூடிய இந்த மசோதாவை தஞ்சாவூர் ஜில்லா பொதுமக்கள் சார்பாக நான் வரவேற்கின்றேன். ஏனென்றால் இதுவரை தஞ்சை ஜில்லா ஒரு பெரிய விவசாய ஜில்லாவாக இருந்து வருகிறது. இன்றைக்கு கும்பகோணத்தில் ஒரே ஒரு சர்க்கார் காலேஜ் இருக்கிறதே தவிர, வேறு கல்வி வசதிக்கு கல்லூரிகள் கிடையாது. ஆனால் அக்கம்பக்கத்திலுள்ள இதர ஜில்லாக்கள் ஒவ்வொன்றிலும், நான்கைந்து காலேஜ்கள் இருக்கும்போது எங்கள் ஜில்லாவிற்கு மட்டும் ஒரே ஒரு கல்லூரி இருந்துவருவது மிகக் குறையாக இருக்கிறது. வெகுநாட்களாக இதைப் பொதுமக்கள் வலியுறுத்திக்கொண்டிருந்தார்கள். ஆனால் அதே சமயத்தில் எங்கள் ஜில்லாவிலே இருக்கக்கூடிய வடபாதிமங்கலம் தியாகராஜ முதலியார், வாண்டையார் போன்ற பெரிய நிலப்பிரபுக்கள் இருந்தாலும்கூட, இதுவரையிலும் தனிப்பட்ட நபர்களாக காலேஜ் ஏற்படுத்துவதற்கு ஒருவரும் முன்னுக்கு வராதது ஒரு வருந்தக்கூடிய சமாசாரம்தான். இதுவரையிலும் அவர்களுடைய சொந்தக் காரியங்களை கவனித்து வந்திருக்கிறார்களே தவிர, பொதுநலனைத் தாங்கள் செய்ய வேண்டுமென்று இதுவரையிலும் முன்வரவில்லை. ஆனால் இப்போது தஞ்சாவூரில் ஒரு கமிட்டி ஏற்படுத்தி டெவலப்மெண்ட் போர்ட் மூலமாக ஒரு காலேஜ் ஏற்படுத்த வேண்டுமென்று கடந்த இரண்டு வருஷங்களாக ஜனங்கள் முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அதாவது அங்கு ஒரு கலைப்பொருட்காட்சி ஏற்படுத்தி, ஒரு அணா இரண்டணா என்று ஒரு சிறிய தொகையை டிக்கட்டாக வைத்து, அதன் மூலமாக மீதமாகக்கூடிய பொருளைக்கொண்டு எப்படியாவது ஒரு ஆர்ட்ஸ் காலேஜ் ஏற்படுத்த வேண்டுமென்ற முயற்சி சென்ற இரண்டு ஆண்டுகளாக நடந்து, அது இந்த ஜூன் மாதத்தில் திறப்பதற்கு சாத்தியப்படுமென்று நம்புகிறேன். ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கக்கூடியதில் முதல் வகுப்பும், மூன்றாம் வகுப்பும் நடப்பதற்கான எல்லா நடவடிக்கைகளையும் இந்தக் காலேஜ் கமிட்டியார்

செய்வார்கள் என்று நம்புகிறேன். ஆகையால்தான் இந்த மசோதாவை நான் தஞ்சை ஜில்லாப் பிரதிநிதி என்ற முறையில் அங்குள்ள மக்களின் சார்பாக வரவேற்கின்றேன்.

" அடுத்தபடியாக, ஒரு மெடிகல் காலேஜ் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் தஞ்சை ஜில்லா பொதுமக்களுக்கும், தஞ்சை நகர வாசிகளுக்கும் ஏற்பட்டிருக்கிறது. ஜனங்களுடைய பிரதிபலிப்பின்படி அந்த ஜில்லா மக்கள் படிப்பதற்கான வசதி பெறுவதற்கு ஒரு மெடிகல் காலேஜ் ஏற்படுத்த வசதி செய்தால் மிகவும் நன்றாக இருக்கும். நண்பர் சுயம்பிரகாசம் அவர்கள் முன்னால் சொல்லியதுபோல் முதலில் செய்துகொடுக்கக்கூடிய வசதியை பெறுவதற்கு ஒப்புக்கொள்வோம். அதற்கடுத்தபடியாக இன்னும் கொஞ்சம் பொருள் சேர்த்து, ஒரு மெடிகல் காலேஜ் ஏற்படுத்த வசதி செய்து கொடுக்கும்படி நிர்ப்பந்திப்போம் என்றார்கள். அதை நானும் ஆதரிக்கிறேன். அந்த அளவிற்கு அதிகப்படியான பணத்தை வசூல் செய்ய முடியாவிட்டாலும், கூடியமட்டும் வசூல் செய்யும் தொகையோடு, சத்திரம் நிதியிலிருந்தும் ஓரளவு அதிகமான தொகையை ஒதுக்க வேண்டுமென்று சர்க்காரை நிர்ப்பந்திக்கலாம். சர்க்காரும் அப்படி ஒதுக்குவார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கிருக்கின்றது. இதிலே கட்சி அரசியல் இருக்கக்கூடாது. கட்சி பேதம் காட்டாமல், முதலில் ஒரு ஆர்ட்ஸ் காலேஜும், பின்னர் ஒரு மெடிகல் காலேஜும் ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். அவ்விதம் செய்வார்களென்ற முழு நம்பிக்கையும் எனக்கிருக்கிறது.

" மெடிகல் காலேஜ் ஏற்படுத்துவதற்காக ஒரு விசாரணைக் கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. அக்கமிட்டியானது தனது ரிப்போர்ட்டைக் கொடுத்திருக்கிறது. அதைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம் என்று கனம் நிதி மந்திரி அவர்களும், கனம் சுகாதார மந்திரி அவர்களும் கூறினார்கள். அதை வைத்துக்கொண்டு, சர்க்காரைப் பொறுத்தமட்டில் எப்படியாவது தஞ்சை ஜில்லாவில் ஒரு மெடிகல் காலேஜ் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கான உறுதி கிடைத்துவிட்டால், அதற்கு மேல் எல்லோரும் சேர்ந்து மெடிகல் காலேஜ் ஏற்படுத்துவதற்கான பண வசூல் செய்யும் நடவடிக்கை எடுக்கலாம்.

" பிறகு, இந்தச் சத்திரம் நிதியில் இன்னும் ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. நிலம் இருக்கிறது; வீடுகள் இருக்கின்றன; பெரிய பெரிய கட்டடங்கள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் கணக்கெடுத்தால் லட்சக்கணக்கான ரூபாய்கள் இருக்கும். ஒரத்தநாட்டிலிருக்கக்கூடிய சத்திரத்திற்குச் சொந்தமான இடத்தில் கால்நடைப் பண்ணைக்கு இட வசதியளிக்க இந்த மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. இனாமாகவோ அல்லது வாடகைக் குறைவாகவோ கால்நடைக்கு ஒதுக்க வேண்டுமென்று இதில் சொல்லப்பட்டிருக்கிறது. அதையும் நான் வரவேற்கின்றேன். இந்தத் தஞ்சை ஜில்லா கால்நடைப் பண்ணையில் உம்பளச்சேரி ரகத்தை ஏற்படுத்தி, அவைகளை நல்லமுறையில் பாதுகாப்பதற்கும், அதைப்போன்ற ரகத்தை இன்னும் மற்றுமுள்ள மாகாணத்திற்கு பரப்புவதற்கான அபிவிருத்திகளைச் செய்வதற்குமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்த உம்பளச்சேரி ரக மாடுகள் மற்ற மாடுகளைப்போல் மிகப் பெரிய மாடுகளாக இல்லாவிட்டாலும், மணலில் நன்கு உழுவதற்கும், மற்ற கடுமையான வேலைகளைச் செய்வதற்கும் திறமையானது. அந்த ரகத்தை அபிவிருத்திச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

" இன்றைக்கு இந்தக் கால்நடைப் பண்ணை இலாகாவில் சில ஊழல்கள் நடைபெறுவதாகச் சொல்லப்படுகின்றது. இதுபற்றி பொதுமக்களும் பல மகஜர்கள் எழுதியிருக்கிறார்கள். அதையும் கனம் விவசாய மந்திரி அவர்கள் கவனிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன். அதாவது இந்த மாடுகள் கட்டுவதற்கான ஷெட்டுகள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது வேண்டியதுதான். அதைக் கண்ட்ராக்டுக்கு விட்டிருக்கிறார்கள். அப்படிக் கண்ட்ராக்டுக்கு விடப்பட்டதில் சரிவர டெண்டர்கள் கிடைக்கவில்லையாம்;

அதிலேதான் சில லஞ்ச ஊழல்கள் நடந்திருப்பதாகக் கூறப்படுகிறது. அதையும் கனம் விவசாய மந்திரி அவர்கள் கவனித்து, நம்முடைய நோக்கம் நிறைவேற, கால்நடைப் பண்ணையை நல்ல முறையில் நடைபெற வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இறுதியாக நான் சொல்ல விரும்புவது, இந்த தஞ்சை சத்திரத்திற்கு நிறைய சொத்து இருக்கிறது. இந்த சொத்திலிருந்து வரக்கூடிய வருமானத்தில், பல லட்சக்கணக்கான ரூபாய்கள், ராஜா காலத்தில் ஏற்பட்ட இந்த சத்திரங்களுக்கு வரக்கூடியவர்களுக்கு அன்னதானம் அளிக்க செலவிடப்படுகிறது. இதனால் பொதுமக்களுக்கு எந்த விதமான பிரயோஜனமும் கிடையாது. வழிப்போக்கர்கள் அந்த காலத்தில் இருந்திருக்கலாம். ராஜா காலத்தில் போக்குவரத்து வசதி கிடையாது. ஆகையால், ராஜா சத்திரங்களை கட்டிவைத்து, பிரயாணிகளுக்கு சாப்பாடு போட்டு அவர்கள் அடுத்த ஊருக்கு செல்லும்வரை தங்குவதற்காக ஏற்படுத்தி வைத்திருந்தார்கள். இன்றைக்கும் அதே முறையை தொடர்ந்து நடத்தவேண்டுமென்ற அவசியமில்லை. இந்த **Tanjore Chatram Endowments (Utilization) Act, 1942**-ன் **preamble**-ல் சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால் 'மஹாராஜா, என்ன காரணத்திற்காக இந்த சத்திரங்களை ஏற்படுத்தினர், என்னென்ன இனங்களுக்கு செலவு செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறார் என்பதை யெல்லாம் கண்டுபிடிக்க முடியவில்லை. சரித்திரத்திற்கு முற்பட்ட விஷயமாக இருக்கிறது' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, நாம் ஏன் பழைய காரியங்களை தொடர்ந்து செய்துகொண்டிருக்க வேண்டும். தொடர்ந்து அதே முறையில் செய்ய வேண்டியது அவசியமில்லை என்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன்.

"சென்ற வருஷத்திற்கு முன்பாக, ஜில்லா போர்டு நிர்வாகத்தின்கீழ் இருக்கும் எல்லா பள்ளிகளிலும் படித்து வந்த ஹரிஜன மாணவர்களுக்கு இந்த சத்திரம் நிதியிலிருந்து இலவச உணவு அளித்து வந்தார்கள். அது இந்த ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டுவிட்டது. அதாவது போன வருஷம் ஜில்லா போர்டு நிர்வாகம் **Collector** கையில் இருந்தபோது நிறுத்திவிட்டார்கள். இந்த வருஷமும், புதிய பிரசிடெண்டு, அதைத் தொடர்ந்து கொடுக்கவில்லை. இந்த நிதியிலிருந்து வழிப் போக்கர்களுக்கு செலவு செய்வதைவிட, பள்ளிக்கூடத்தில் படிக்கக்கூடிய ஹரிஜன மாணவர்களுக்கு இலவச உணவு அளிக்க நிதியிலிருந்து பணம் ஒதுக்கினால், ஒரு நல்ல இனத்திற்கு பணம் செலவிட்டதாகும். இப்படி செய்வதற்கு அந்த சட்டத்தில் இடமிருக்கிறது. குறிப்பிட்ட காரியத்திற்குத்தான் செலவு செய்யவேண்டுமென்று ஏற்படுத்தப்பட்ட **Registered Document**-ஆக இருந்தால், அதை மாற்றுவதற்கு சட்டம் கொண்டுவர நமக்கு அதிகாரமில்லை. ஆனால் ராஜா காலத்தில் ஒதுக்கப்பட்ட சொத்து எந்த விதமான குறிப்பிட்ட காரியத்திற்கும் என்று இல்லாமல் இருப்பதால், எதற்கு வேண்டுமானாலும் உபயோகப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, இதை சர்க்கார் கவனித்து, ஹரிஜன மாணவர்களுக்கு உணவு அளிப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன், இந்த மசோதாவை சபை பூராவும் முழுமனதுடன் ஆதரிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்."

*SRI M. D. THIYAGARAJA PILLAI :—"கனம் சபாநாயகர் அவர்களே, நீண்ட நெடும் காலமாக தஞ்சை ஜில்லாவுக்கு அவசியமாக இருந்த முதல் கிரேட் (grade) **Arts College** நிறுவும் ஏற்பாட்டை கனம் மந்திரி அவர்கள் சட்டத்தின் மூலமாக கொண்டுவந்ததற்காக பாராட்டுகிறேன். பல வருஷங்களாக குறையாக உள்ள காலேஜை சீக்கிரம் ஏற்படுத்த வேண்டுமென்று கனம் சுயம்பிரகாசம் அவர்களும், மற்றும் இதர நண்பர்களும் தெரிவித்தார்கள். அதை நாங்களும் ஒத்துக்கொள்ளுகிறோம். இந்த நிலைமையை நன்றாக ஆலோசித்து, தஞ்சை ஜில்லாவிலுள்ள ஆயிரக்கணக்கான மாணவர்கள், மாணவிகள், கும்பகோணத்தில் ஒரே ஒரு **Arts College** தான் இருப்பதால் மற்ற வெளியில் உள்ள

[Margin: –10 p.m.]

காலேஜுகளில் சேர்ந்து வாசிக்கும்படி இருக்கிறது, ஆகையால் **Arts College**-கள் மேலும் அவசியம் என்பதை எல்லோரும் உணர்ந்து—மேலும் இந்த சந்தர்ப்பத்தில் நிலச் சீர்திருத்தங்கள் போன்ற சட்டங்கள் வருவதற்கு இணங்க—தஞ்சையிலுள்ள பெரிய மிராசுதார்கள், பூண்டி வாண்டையார் குடும்பம், மாயவரம் அம்மணவரம் தர்ம சொத்து **Trust**, அதிராம்பட்டினம் முஸ்லீம் தர்ம சொத்து **Trust**, ஆகியவர்கள் **Arts College**-கள் தஞ்சை ஜில்லாவில் ஏற்படுத்த இப்போது ஏற்பாடு செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே மூன்று **Arts College**-கள் இப்போது ஏற்படுத்துவதற்கு தஞ்சை மிராசுதார்கள் முன்வந்திருக்கிறார்கள். ஆகவே, இந்த சந்தர்ப்பத்தில் ஸ்ரீ அழகப்ப செட்டியார் அவர்கள் ஒரு **Medical College**-ஐ ஏற்படுத்த முன்வந்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. ஏற்கனவேயே சில **Arts College**-களில் மாணவ, மாணவிகள் குறைவாக இருக்கிறார்கள். மேலும் வெறும் பட்டப்படிப்புக்கு பல்லாயிரக் கணக்கான ரூபாய்களை செலவு செய்த பிறகு, அனேகம் பேர் வேலையில்லாது திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால், இந்த நிலையில் தனிப்பட்டவர்கள் தஞ்சை ஜில்லாவில் **Arts College**-களை ஏற்படுத்த முன்வந்து, நஞ்சை நிலத்தையும் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களையும் அதற்காக ஒதுக்கி வைக்க அரசாங்கத்துடன் கடிதப் போக்குவரத்து செய்துகொண்டிருக்கிறார்கள். ஸ்ரீ அழகப்ப செட்டியார் மெடிகல் காலேஜ் ஏற்படுத்த முன்வந்துள்ள சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு தஞ்சையில் சர்க்கார் ஒரு **Medical College**-ஐ ஏற்படுத்துவது மிகவும் அவசியம் என்பதை தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். **Medical College**-ஐ தஞ்சையில் வைப்பதற்கு எல்லா விதமான வசதிகளும் இருக்கின்றன.”

THE HON. SRI C. SUBRAMANIAM :—“ கனம் அங்கத்தினர்கள், இந்த **Medical College** தஞ்சையில் வரவேண்டுமென்று உண்மையாகவே பிரியப்படுவார்களேயானால், தனிப்பட்டவர்கள் எவ்வளவு பேர், எவ்வளவு லட்ச ரூபாய்கள் இதற்காக தஞ்சையில் கொடுக்கத் தயாரா யிருக்கிறார்கள் என்பதைப்பற்றிய விவரங்களை இன்னும் ஒரு மாதத்திற் குள்ளாக சேகரித்து சர்க்காரிடம் தாக்கல் செய்தால், இது சம்பந்தமாகமுடிவு செய்ய அனுகூலமாக இருக்கும்.”

SRI M. D. THIYAGARAJA PILLAI :—“ கனம் நிதி மந்திரி அவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் **Medical College** ஏற்படுத்த தேவையான நிதியைப்பற்றி ஞாபகப்படுத்தியது மிகவும் அவசியமானதும், பிரயோஜனபடக் கூடியதாகவும் உள்ளது. ஆகவே அவர் கூறியதை வரவேற்கிறேன். இன்று, அனேக மிராசுதார்கள் **Arts College** ஏற்படுத்த நிதி ஒதுக்க முன்வந்துள்ளார்கள். இதே மாதிரியாக **Medical College** ஏற்படுத்த நிறைய பணம் ஒதுக்க முன்வருவதற்கு தயாராக யிருக்கிறார்கள். இதற்கு எடுத்துக்காட்டாகத்தான், பல மாதங்களுக்கு முன்னதாக வலிவலம் திரு. கே. எம். தேசிகர் அவர்கள் 100 ஏக்கர் நல்ல நஞ்சை நிலத்தை **Medical College** ஏற்படுத்துவதற்கு கொடுப்பதாக சர்க்காருக்குத் தெரிவித்து இருக்கிறார். இது கனம் நிதி மந்திரி அவர்களுக்கு தெரியுமென்று நினைக்கிறேன். எனினும், இந்த நல்ல சந்தர்ப்பத்தில், கனம் நிதி மந்திரி அவர்கள் சட்ட சபையின் மூலமாக அறிவித்ததற்கு இணங்க, தஞ்சை ஜில்லாவிலுள்ள மிராசுதார்களையும், மற்றும் தென்னாற்காடு, திருச்சி ஜில்லாவை சேர்ந்த சட்டசபை அங்கத்தினர்கள் மூலமாக, அங்குள்ள வியாபாரிகளையும், பொதுமக்களையும், மெடிகல் காலேஜ் ஏற்படுத்த இன்னும் அதிக நிதி ஒதுக்க முன்வருமாறு நானும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

